இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

# தின பூமி

thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com


மதுரை, சனி, ஜனவரி 11, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00



**ஜப்பானில் தனிமையில் இருப்பவர்களுக்கு நண்பராக இருந்து ஆண்டுக்கு ரூ.69 லட்சம் சம்பாதிக்கும் நபர்**
...2-ம் பக்கம்

**டெல்லியில் குடியரசு தினவிழா: பங்கேற்குமாறு பொதுமக்கள் 10 ஆயிரம் பேருக்கு அழைப்பு**
...3-ம் பக்கம்

**சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணியின் ஆலோசகராக மகேந்திர சிங் டோனி நியமனம்?**
...6-ம் பக்கம்





● சென்னையில் நேற்று சட்டமன்ற பேரவையில் பெண்களுக்கெதிரான குற்றங்களை தடுக்கும் வகையில் 2 சட்டத்திருத்த மசோதாக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து உரையாற்றினார்.

### இனி குற்றத்தில் ஈடுபடுவோர் ஜாமீனில் வெளியே வர முடியாது:

### 12 வயதுக்குட்பட்ட சிறுமிகள், இளம்பெண்கள், பெண்களை

# பாலியல் வன்கொடுமை செய்தால் மரண தண்டனை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டதிருத்த மசோதா தாக்கல்

சென்னை, ஜன. 11-

**பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு கடும் தண்டனை வழங்கும் 2 சட்ட திருத்த மசோதாக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சட்டசபையில் தாக்கல் செய்தார். அதன்படி 12 வயதுக்குள் உள்ள சிறுமிகள், 18 வயதுகுட்பட்ட இளம் பெண்கள் மற்றும் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு மரண தண்டனை கிடைக்கும். மேலும் குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாது என சட்டத்திருத்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**5-வது நாள் கூட்டம்...**

நடப்பாண்டின் முதல் தமிழக சட்டசபை தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் 4-ம் நாள் கூட்டத்தில் பல்கலைக் கழக மானியக் குழு கொண்டு வந்துள்ள புதிய விதிகளுக்கு எதிராக தமிழ்நாடு சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம் கொண்டு வந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. இந்த நிலையில், நேற்று சட்டசபை 5வது நாள் கூட்டம் தொடங்கி நடைபெற்றது.

**கடும் தண்டனை....**

2025-ம் ஆண்டு தமிழ்நாடு, பெண்ணுக்கு துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற திருத்தச் சட்ட முன்வடிவுகளை முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிமுகம் செய்தார். ஏற்கெனவே இத்தகைய குற்றங்களுக்கு தண்டனைகள் வரையறுக்கப்பட்டிருந்தாலும், இத் தண்டனைகளை மேலும் கடுமையாக்கிவிட வேண்டிய அவசியம் உள்ளதாகவே இந்த அரசு கருதுகிறது, என்று முதல்வர் கூறினார். முதல்வர் தாக்கல் செய்துள்ள சட்ட திருத்த மசோதாவில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கும் வகையிலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான சிறை தண்டனை விதிக்கும் வகையிலும் திருத்தங்கள் இடம்பெற்றுள்ளன.

**சமூகப் பங்களிப்பு....**

2 சட்டத்திருத்த முன்வடிவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து, பேசியதாவது:- சமூகத்தில் சரிபாதியான பெண் இனத்தின் மேன்மைக்கும், வளர்ச்சிக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தரக்கூடிய அரசு திமுக அரசு. சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அனைத்து வகையிலும் பெண்களை முன்னேற்றி வரக்கூடிய அரசாக அரசு செயல்பட்டு வருகிறது. இந்த வளர்ச்சியை நாம் தினந்தோறும் அறிந்தும், உணர்ந்தும் வருகிறோம். இதன்மூலம் பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி வருகிறது.

**தயவு தாட்சணியமின்றி**

இத்தகைய சூழலில் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டு வருகிறது. பெண்கள் அதிகம் வேலைக்கு செல்லும் மாநிலமாகவும், அதிகமான சமூகப் பங்களிப்பு செய்யும் மாநிலமாகவும் தமிழகம் வளர்ந்து வருகிறது. அதேநேரத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்தாக வேண்டும். பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும்,
(கடைசி பக்கம் பார்க்க)

# சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த மத்திய அரசை வலியுறுத்துவோம்

## சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பதில்

சென்னை, ஜன. 11-

**சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசுக்கே அதிகாரம் உள்ளது என்றும் இதுதொடர்பாக மத்திய அரசை வலியுறுத்துவோம் என்றும் சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்தார்.**

நடப்பாண்டின் முதல் தமிழக சட்டசபை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று சட்டசபை 5-வது நாள் கூட்டம் தொடங்கி நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு முதல்வர், அமைச்சர்கள் பதில் அளித்தனர். இந்த நிலையில், பாமக சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தப்போவது இல்லை. ஆகவே மாநில அரசு அதனை நடத்த வேண்டும் என நாங்கள் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம் என கூறினார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகையில், "சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசுக்கே அதிகாரம் உள்ளது. பீகாரில் மாநில அரசு ஆய்வு நடத்தினார்கள். அதன் நிலை என்ன ஆனது?. இருப்பினும் மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்துவோம்" என்று கூறினார்.

### இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள

# ஈரோடு கிழக்கு தொகுதியில் மனுத்தாக்கல் தொடங்கியது

## சுயேட்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன. 11-

**இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.முதல் நாளில் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.**

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மரணம் அடைந்ததை தொடர்ந்து இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ம் தேதி நடக்கிறது. இதையடுத்து ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று காலை 11 மணிக்கு தொடங்கியது. சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் வந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

அதிக தேர்தல்களில் போட்டியிட்டு சாதனை படைத்த மேட்டூரை சேர்ந்த பத்மராஜன் இந்த இடைத் தேர்தலிலும் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கல் செய்ய வருகிற 17-ம் தேதி கடைசி நாள் ஆகும்.

நேற்று பிற்பகல் 3 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்பட்டன.

தொடர்ந்து வருகிற 13-ம் தேதி மற்றும் 17-ம் தேதி ஆகிய நாட்கள் மட்டுமே வேட்புமனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்ய முடியும். மற்ற நாட்கள் அரசு விடுமுறை நாட்கள் ஆகும்.

18-ம் தேதி மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்புமனுவை திரும்ப பெற 20-ந் தேதி கடைசி நாளாகும்.

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# தமிழ்நாடு முழுவதும் சிறப்பு பஸ்கள் இயக்கம் தொடக்கம்

சென்னை, ஜன. 11-

**பொங்கல் பண்டிகையையொட்டி தமிழகம் முழுவதும் நேற்று முதல் 21,904 சிறப்புப் பேருந்துகள் இயக்கம் தொடங்கின.**

பொங்கலையொட்டி நேற்று (ஜன. 10) முதல் 13-ம் தேதி வரை சென்னையிலிருந்து தினமும் இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 5,736 சிறப்புப் பேருந்துகள் என நான்கு நாள்களும் சேர்த்து 14,104 பேருந்துகள், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட நாள்களுக்கு 7,800 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 21,904 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

பொங்கல் பண்டிகை முடிந்த பின்னர், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு வரும் பயணிகளின் வசதிக்காக ஜன. 15 முதல் 19-ஆம் தேதி வரை, தினமும் இயக்கக்கூடிய 10,460 பேருந்துகளுடன் கூடுதலாக 5,290 சிறப்புப் பேருந்துகளும், ஏனைய பிற ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 6,926 என மொத்தம் 22,676 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன. இதன்படி, பொங்கலுக்கு மொத்தம் 44,580 பேருந்துகள் இயக்க தமிழக போக்குவரத்துத் துறை திட்டமிட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு கிளாம்பாக்கம் மஃப்சல் புறநகர் பேருந்து முனையம்: புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள். கிளாம்பாக்கம் மாநகர் பேருந்து முனையம்: வந்தவாசி, போளூர் மற்றும் திருவண்ணாமலை மார்க்கமாக செல்லும் பேருந்துகள். கோயம்பேடு பேருந்து நிலையம்: கிழக்கு கடற்கரை (இசிஆர்), காஞ்சிபுரம், வேலூர், பெங்களூரு மற்றும் திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள். மாதவரம் புதிய பேருந்து நிலையம்: பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திர மாநிலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் மற்றும் வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம் மற்றும் திருவண்ணாமலை பேருந்துகள்.

முன்பதிவு மையங்கள்: கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் 7 முன்பதிவு மையங்களும், கோயம்பேடு பேருந்து நிலையத்தில் 2 முன்பதிவு மையங்கள் என மொத்தம் 9 முன்பதிவு மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த மையங்கள் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை செயல்படும். மேலும், டிஎன்எஸ்டிசி செயலி மூலமும் www.tnstc.in எனும் இணையதளம் மூலமாகவும் பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவை தொடர்பான தகவல்கள் மற்றும் புகார்களுக்கு 94450 14436 என்ற கைப்பேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம் என போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது. மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்வது குறித்த புகார்களை 1800 425 6151 மற்றும் 044-24749002, 044-26280445, 044-26281611 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளியூர் செல்லும் பயணிகளின் வசதிக்காகவும், நகரின் பல்வேறு பகுதியிலிருந்து கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் பேருந்து நிலையங்களுக்கு ஜன. 10 முதல் 13-ஆம் தேதி வரை கூடுதலாக 320 இணைப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

### ஜனவரி மாத வரிப்பகிர்வாக

# தமிழகத்திற்கு ரூ.7,057 கோடி விடுவிப்பு

புதுடெல்லி, ஜன. 11-

**தமிழ்நாட்டுக்கு ரூ.7,057 கோடியை வரிப்பகிர்வாக மத்திய அரசு விடுவித்துள்ளது.**

**நாட்டில் வசூலாகும் வரி தொகையை மத்திய அரசு, மாநிலங்களுக்கு பகிர்ந்து அளித்துவருகிறது. அதன்படி 2025 ஜனவரி மாதத்துக்கான வரி பகிர்வாக ரூ.1 லட்சத்து 73 ஆயிரத்து 030 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. இதில் அதிகபட்சமாக உத்தரபிரதேசத்திற்கு ரூ.31,039 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பீகாருக்கு ரூ.17,403 கோடியும், மத்தியபிரதேசத்திற்கு ரூ.13,588 கோடியும்ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.**

**ஆந்திரபிரதேசத்துக்கு ரூ.7,002.52 கோடி, அருணாச்சலபிரதேசத்துக்கு ரூ.3,040.14 கோடி, அசாமுக்கு ரூ. 5,412.38 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், சத்தீஸ்கருக்கு ரூ.5,895.13 கோடி, குஜராத்துக்கு ரூ.6,017.99 கோடி, அரியானாவுக்கு ரூ.1,891.22 கோடி, இமாச்சலபிரதேசத்துக்கு ரூ.1,436.16 கோடி, ஜார்க்கண்ட்டுக்கு ரூ.5,722.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**கர்நாடகாவுக்கு ரூ. 6,310.40 கோடி, கேரளாவுக்கு ரூ.3,330.83 கோடி, தமிழ்நாட்டுக்கு ரூ.7,057.89 கோடி, தெலங்கானாவுக்குரூ.3,637.09கோடி,உத்தராகண்ட்டுக்குரூ.1,934.47கோடி,மேற்கு வங்கத்துக்கு ரூ.13,017.06 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.**

### தமிழகத்தில் தஞ்சாவூர் உள்ளிட்ட

# 5 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜன. 11-

**தமிழகத்தில் நாளை தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக அந்த மையம் வெளியிட்ட அறிக்கையில், நேற்று முன்தினம் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய வளி மண்டல கீழடுக்கு சுழற்சி, நேற்று தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

நாளை (12-01-2025): கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 13, 14-01-2025: தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னடலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் பாம்பன் பாலம் விரைவில் திறந்து வைக்கப்படும்

## மத்திய அமைச்சர் அஸ்வினி தகவல்

சென்னை, ஜன. 11-

**தமிழகத்தில் பாம்பன் பாலம் அமைக்கும் பணி முழுமையாக நிறைவு பெற்று சோதனை ஓட்டங்கள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த பாலமும் திறந்து வைக்கப்படும் என்றும் தமிழக அரசின் ஒத்துழைப்பு இல்லாததால் மதுரை - தூத்துக்குடி இடையே புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.**

சென்னை ஐசிஎப்-ல் தயாரிக்கப்பட்டு வரும் அம்ரித் பாரத் 2.0 படுக்கை வசதி கொண்ட ரயில் பெட்டிகளை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேற்று ஆய்வு செய்தார். அதைத் தொடர்ந்து செய்தியாளரிடம் அவர் கூறியதாவது: நாடு முழுவதும் ரயில் போக்குவரத்தை மேம்படுத்த மத்திய அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழகத்துக்கு ரயில்வே துறை சார்பில் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களுக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்நிலையில், தூத்துக்குடியில் இருந்து அருப்புக்கோட்டை வழியாக மதுரைக்கு புதிதாக ரயில் பாதை அமைக்கும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், இத்திட்டத்தை வேண்டாம் எனக் கூறி தமிழக அரசிடம் இருந்து எழுத்துபூர்வமான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன் காரணத்தால் இத்திட்டத்தை மத்திய அரசு முழுமையாக கைவிட்டது.


ஏழை எளிய மக்களும் வந்தே பாரத் ரயில்களில் பயணிக்கும் அனுபவத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக குறைந்த கட்டணத்தில் அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.
(கடைசி பக்கம் பார்க்க)

## மார்க்கெட் விலை நிலவரம்

| BSE | NSE |
|---|---|
| -241.30 | -95.00 |
| பாயிண்ட் 77,378.91 | பாயிண்ட் 23,431.50 |



**தங்கம்**
1 சவரன் ₹58,280
1 கிராம் ₹7,285



**வெள்ளி**
1 கிலோ ₹101,000
1 கிராம் ₹101.00

**டாலர்** ₹86.10

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

### ஜப்பானில் தனிமையில் இருப்பவர்களுக்கு

# நண்பராக இருந்து ஆண்டுக்கு ரூ.69 லட்சம் சம்பாதிக்கும் நபர்



**டோக்கியோ, ஜன. 11-**

ஜப்பானில் தனிமையில் இருப்பவர்களுக்கு நண்பராக வாடகைக்கு செல்லும் நபர் ரூ. 69 லட்சம் சம்பாதித்து வருகின்றார்.

ஜப்பான் கஜப்பானைச் சேர்ந்த 41 வயது ஷோஜி மோரிமோட்டோ என்பவர் 2018-ம் ஆண்டு அவர் பணிபுரிந்த நிறுவனத்தில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அதன்பிறகு எந்த வேலைக்கும் செல்லாத அவர், தனிமையில் இருப்பவர்களுக்கு துணையாக செல்வதன் மூலம் ஆண்டுக்கு 80 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் இந்திய மதிப்பு படி ரூ.69 லட்சம் சம்பாதித்து வருகிறார்.

தனிமையில் இருப்பவர்களுக்கு உரையாடும் நபராகவும், நட்பை நாடுபவர்களுக்கு வாடகை நண்பராகவும் செல்லும் பணியில் ஈடுபட்டு பிரபலமடைந்துள்ளார் ஷோஜி. மேலும், ஒருவர் வீட்டை சுத்தம் செய்யும் போது பேச்சுத் துணைக்காக நேரில் செல்வது, விடியோ காலில் அவர்களுடன் உரையாடுவது, இசை நிகழ்ச்சிக்கு வாடிக்கையாளருக்கு துணையாக அவரின் நண்பராக செல்வது போன்ற சேவைகளை ஷோஜி செய்து வருகிறார். ஆங்கில ஊடகத்துக்கு ஷோஜி அளித்த பேட்டியில், கொளுத்தும் வெயிலில் வரிசையில் நிற்பது, குளிரில் பல மணிநேரம் நிற்பது போன்ற பல்வேறு கடினமான சூழலையும் தான் சந்தித்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஆண்டுக்கு 1 ஆயிரம் கோரிக்கைகளை பெறும் ஷோஜி, 2 முதல் 3 மணிநேரத்துக்கு அதிகபட்சமாக ரூ. 17 ஆயிரம் வரை கட்டணமாக பெற்று வருகிறார்.

# பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே அணை கட்ட சீனா புதிய திட்டம்

**பெய்ஜிங், ஜன. 11-**

இந்தியாவுக்குள் பாய்ந்தோடும் பிரம்மபுத்திரா ஆற்றுக்குக் குறுக்கே உலகிலேயே மிகப்பெரிய அணையைக் கட்ட சீனா திட்டம்.

இந்திய எல்லையை யொட்டி, தனது ஆக்கிரமிப்பில் உள்ள திபெத்தில் பாய்ந்தோடும் பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே சுமார் ரூ.11.17 லட்சம் கோடி செலவில், உலகின் மிகப் பெரிய அணையை கட்ட சீனா முடிவு செய்துள்ளது.

இமயமலை அமைந்திருக்கும் பகுதியில் உள்ள மிகப் பெரிய பள்ளத்தாக்கில் வளைந்து அருணாசல பிரதேசத்துக்குள்ளும், பின்னர் வங்கதேசத்துக்குள்ளும் பிரம்மபுத்திரா ஆறு பாயும் நிலையில், அந்தப் பள்ளத்தாக்கில் தான் அணை கட்டப்பட உள்ளது என்பது, மிகப்பெரிய புவியியல் மாறுபாட்டை ஏற்படுத்ததலாமோ, அதனால் இயற்கைப் பேரிடர் நேரிடுமோ என பல்வேறு ஐயங்களையும் எழுப்புகிறது. அணை கட்ட திட்டமிட்டிருக்கும் பகுதிக்கு அருகே, இந்த வாரத் தொடக்கத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம், இந்தியாவின் அச்சத்தை அதிகரிக்கவே செய்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் அவையின் முன்னாள் பொதுச்செயலாளர் கோஃபி அன்னான் ஒருமுறை பேசுகையில், குடிநீருக்குத்தான் கடுமையான போட்டி இருக்கும், எதிர்காலத்தில் இந்த குடிநீர், மோதல் மற்றும் போர்களுக்குக் காரணமாக அமையும் என்று கூறியிருந்தார்.

இந்திய எல்லையை யொட்டி, தனது ஆக்கிரமிப்பில் உள்ள திபெத்தில் பாய்ந்தோடும் பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே சுமார் ரூ.11.17 லட்சம் கோடி செலவில், உலகின் மிகப் பெரிய அணையை கட்ட சீனா முடிவு செய்துள்ளது.

இந்தியா - சீனா இடையே ஏற்கனவே பல பிரச்சினைகள் இருக்கும் நிலையில், புதிதாக ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தும் வகையில், பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே மிகப் பெரிய பாலத்தைக் கட்டுவதற்கு சீன அரசு கடந்த மாதம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த பிரம்மபுத்திரா ஆறு இந்தியாவுக்குள் நுழைவதற்கு முன்பு, சீனத்தில் மிகப் பெரிய வளைவில் பயணித்து நாட்டுக்குள் நுழைகிறது. இங்குதான் மிகப்பெரிய மின்உற்பத்தி திறன் கொண்ட அணையை அமைக்க திட்டமிட்டுள்ளது சீனா.

ஆனால், இந்த அணை கட்டப்பட்டால், இந்தியா மற்றும் வங்கதேசத்துக்குள் பாயும் நீர் தடைபடும் என இயற்கை ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இது குறித்துப் பேசிய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால், சீனா கட்ட உத்தேசித்துள்ள அணைப் பகுதியை இந்தியா தொடர்ந்து கண்காணிக்கும், நமது நலன் எந்த வகையில் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார். ஆனால், இந்த அணை கட்டப்படுவதன் பின்னணியில், மிகப்பெரிய நிலச்சரிவு அபாயம் ஏற்படுத்துவதும், இந்தியாவுக்குள் வறட்சி அல்லது வெள்ளத்தை ஏற்படுத்தும் நோக்கமும் இருக்கலாம் என்றே ஆரம்பம் முதல் இந்திய நிபுணர்கள் எச்சரிக்கை ஒலியை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசு உச்சபட்ச எச்சரிக்கையுடன் இருப்பதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் செவ்வாய்க்கிமை தெரிவித்திருந்தார். இந்த வாரம் திபெத்தில் நேரிட்ட மிகப் பயங்கர நிலநடுக்கத்தில் 126 பேர் பலியானார்கள். இந்த சம்பவம், அப்பகுதி, நிலநடுக்கத்தால் பாதிக்கும் அபாயம் கொண்ட இடமாக இருப்பதையே உணர்த்துகிறது. அதுபோன்ற ஒரு இடத்தை சீனா, உலகிலேயே மிகப்பெரிய அணை கட்ட தேர்ந்தெடுத்திருப்பதில் எப்படி நல்ல உள்நோக்கம் இருக்கும் என்று கருத முடியும் எனவும் கேள்விகள் எழுகின்றன.

# மலேசியா செல்லும் இந்தியர்களுக்கான இலவச விசா டிசம்பர் 31 வரை நீட்டிப்பு

**சென்னை, ஜன.11-**

மலேசியா செல்லும் இந்திய பயணிகளுக்கான 30 நாட்கள் இலவச விசா, வரும் 2026 டிச.31-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக, அந் நாட்டின் துணை தூதர் சரவணக்குமார் குமார வாசகம் மற்றும் மலேசியா சுற்றுலாத் துறை இயக்குநர் (தென் இந்தியா மற்றும் இலங்கை) ஹிஷாமுதின் முஸ்தபா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மலேசியா சுற்றுலாத் துறை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியதாவது: இந்தியா - மலேசியா இடையில் நல்ல நட்புறவு நீடித்து வருகிறது. குறிப்பாக உலகளவில் இருந்து மலேசியாவுக்கு சுற்றுலா வரும் பயணிகளின் எண்ணிக்கையில் சிங்கப்பூர், இந்தோனேசியா, சீனா, தாய்லாந்து நாடுகளை தொடர்ந்து இந்தியா 5-வது இடத்தை பிடித்துள்ளது. இந்தியாவில் இருந்து மலேசியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கடந்த 2023 டிசம்பர் மாதம், இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு 30 நாட்களுக்கான இலவச விசா மலேசிய அரசால் அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், கடந்த ஓராண்டில் (2024) மட்டும் இந்தியாவில் இருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் மலேசியாவுக்கு வருகை தந்துள்ளனர்.

இதில் 71.7 சதவீதம் தென் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் மலேசியா சுற்றுலாத்துறையில் தமிழகம் மிகவும் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக மலேசியாவுக்கு வருகை தரும் இந்திய சுற்றுலா பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் 30 நாட்களுக்கான இலவச விசா வரும் 2026 டிச.31-ம் தேதி வரை தற்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.

மலேசியா நாட்டின் வளமான கலாச்சாரம், பாரம்பரியமிக்க மக்களின் வாழ்க்கை முறை, அழகிய கடற்கரைகள், மலை பிரதேசங்கள், எழுச்சி மிகு நகரங்கள் போன்றவற்றை பார்த்து ரசிப்பதற்கான வாய்ப்பாக இந்த அறிவிப்பு அமையும் என நம்புகிறோம். அந்தவகையில் நடப்பாண்டில் (2024-25) இந்திய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 13 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்ப்பார்க்கிறோம். இதற்காக கூடுதல் விமானங்களை இயக்கவும் திட்டமிட்டு வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

முன்னதாக மலேசியா சுற்றுலாத்துறை சார்பில் நடப்பாண்டுக்கான 'விசிட் மலேசியா 2026' லச்சினை வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் மலேசியா குடியுரிமை அதிகாரி சுக்மாவதி பிந்தி முகமது இட்ரிஸ், மலேசியா சுற்றுலாத்துறையின் சந்தைப்படுத்துதல் பிரிவு (சென்னை) அதிகாரி சயீத் அன்வர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஏர் இந்தியா விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு

### சென்னையில் அவசரமாக தரையிறக்கம்

**சென்னை, ஜன.11-**

சிங்கப்பூர் சென்ற ஏர் இந்தியா விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவசரமாக தரையிறக்கப் பட்டது.

இதுதொடர்பாக ஏர் இந்தியா அதிகாரி ஒருவர் கூறுகையில், சென்னையிலிருந்து 170 பயணிகளுடன் நேற்று காலை சிங்கப்பூருக்கு புறப்பட்டுச் சென்ற ஏஐ-346 என்ற விமானம் நடுவானில் தொழில்நுட்ப கோளாறு கண்டறிந்த நிலையில், முன்னெச்சரிக்கை சோதனைக்காக விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. விமானத்தில் பயணித்த பணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பத்திரமாகத் தரையிறங்கினர். சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குப் பயணிகளை உடனடியாக செல்ல மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

### மயிலாடுதுறையில் துணிகரம்:

# சர்க்கரை ஆலை ஊழியர் வீட்டில் 125 பவுன் தங்க நகை கொள்ளை

**சீர்காழி, ஜன. 11-**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, மங்கைமடம் அருகே பாலாஜி நகரை சேர்ந்தவர் செல்வேந்திரன். இவர் அப்பகுதியில் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றில் வேலை செய்கிறார். கடந்த திங்கட்கிழமை தனது மகளின் பிரசவத்திற்காக மயிலாடுதுறைக்கு சென்ற செல்வேந்திரன் நேற்று அதிகாலை வீடு திரும்பினார். வீடு திரும்பிய செல்வேந்திரனிற்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. அவருடைய வீட்டின் பின்பக்க கதவானது உடைந்த நிலையில் இருந்தது. உடனடியாக அவர் வீட்டிற்குள் சென்று பார்த்த போது அங்கு அனைத்து பொருட்களும் ஆங்காங்கே சிதரிக்கிடந்தன. மேலும், பீரோவில் வைத்திருந்த 125 சவரன் நகையை மர்ம நபர்கள் திருடி சென்றது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் திருவெண்காடு போலீசில் புகார் அளித்தார். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கொள்ளையர்களை தேடிவருகின்றனர்.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, ஜன.11-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.200 உயர்ந்து விற்பனையானது.

தங்கம் விலையில் ஏற்ற, இறக்கம் தொடருகிறது. கடந்த மாதம் (டிசம்பர்) 26, 27-ம் தேதிகளில் விலை அதிகரித்தது. பின்னர் விலை குறைந்த தங்கம், இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து மீண்டும் ஏறுமுகத்தில் காணப்படுகிறது. கடந்த 3-ந்தேதி தங்கம் விலை சவரனுக்கு ரூ.640 அதிரடியாக உயர்ந்த நிலையில் மறு நாள் ரூ.360 குறைந்தது. நேற்று முன்தினம் தங்கம் விலை சவரனுக்கு ரூ.280 உயர்ந்த நிலையில் நேற்று மேலும் அதிகரித்து விற்பனையானது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.200 உயர்ந்து ரூ.58,280-க்கு விற்பனையானது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.25 உயர்ந்து ரூ.7,285-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.101-க்கு விற்பனையானது.

**11-01-2025**




**மேஷம்:-** கவனமாகப் படித்தால் கல்வியில் தேர்ச்சி பெறலாம். வாக்குவாதங்களை தவிர்த்தால் இல்லத்தில் அமைதி நிலவும். காரியங்கள் கைகூட கடின உழைப்பு தேவை.

**ரிஷபம்:-** பேச்சாலேயே ஆட்களை மயக்கி ஆதாயம் அடைவீர்கள். வாய்க்கு ருசியாக வக்கணையாக சாப்பிட ஆர்வம் கொள்வீர்கள். புதிய வேலை வாய்ப்பு, கல்வியில் தேர்ச்சி என அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** நிம்மதி என்றால் என்ன என்று தேட வேண்டிய நிலை ஏற்படும். பெண்களால் பணவிரயம் ஏற்படும். இயலாமையால் அனைவரின் மேலும் ஒரு தேவையற்ற வெறுப்பு ஏற்படும்.

**கடகம்:-** ஆரோக்கியம் மேம்படும் அனுகூலமான நாள். தனவரவு அதிகரிக்கும், பெண்களிடம் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்படும். டாக்டர்கள் கைவிட்ட கேஸ்கூட துள்ளி எழுந்து ஓடும்..

**சிம்மம்:-** எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். இனிமையான, மற்றும் சாதுர்யமான பேச்சாற்றலால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**கன்னி:-** பக்தி மயமான நாள். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**துலாம்:-** நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், சொந்த பந்தங்களுக்கு இடையே ஒற்றுமை குறையும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியிடத்தில் சாதகமான சூழல் உருவாகும்.

**விருச்சிகம்:-** வியாபாரம் மற்றும் தொழில் அபிவிருத்தி ஏற்படும் நாள். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

**தனுசு:-** இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் இன்பம் பெருகும். பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியம், கொண்டாட்டங்கள் நிறைவேறும்.

**மகரம்:-** பங்குச்சந்தை விவகாரங்களில் நாட்டம் ஏற்படும். எவ்வளவு நன்றாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. தங்கள் உடமைகளை பாதுகாப்புடன் வைத்துக் கொள்வது நல்லது.

**கும்பம்:-** அன்னையின் சொல் கேட்டு நடந்தால் ஆனந்தம் பெருகும். வாழ்வில் உழைத்து முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம். வயிறு சம்பந்தமான உபாதைகள் எழலாம்.

**மீனம்:-** எல்லா முயற்சிகளிலும் எளிதில் வெற்றி கிட்டும். மனதில் மகிழ்ச்சியும் தெம்பும் அதிகரிக்கும். குழந்தைகள் பால் அன்பைப் பொழிவார்கள். புதிய நண்பர்கள் தொடர்பும் உதவியும் கிடைக்கும்.

### மலிவான அரசியல் பேர்வழிகளை புறக்கணிப்போம்:

# பெரியாரை இழிவு செய்யவோருக்கு அமைச்சர் துரைமுருகன் பதிலடி

**சென்னை, ஜன. 11-**

மானமும் அறிவும் இருப்பவர்கள் பெரியாரை இழிவாகப் பேச மாட்டார்கள். அவர் மீது அவதூறு பரப்பி விளம்பரம் தேட நினைக்கும் இழிவான - மலிவான அரசியல் பேர்வழிகளைப் புறக்கணிப்போம். எதையாவது செய்து, தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கலாமா என நினைப்பார்களேயானால் சட்டம் தன் கடமையை நிச்சயம் செய்யும்.'' என்று தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் புதுச்சேரியில் பேசிய நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ''திராவிடத்தையும், பெரியாரையும் எதிர்ப்பதுதான் எனது கொள்கை. மண்ணின் விடுதலைக்காக தனது சொத்தை விற்றவர் வஉசி. ஆனால், சொத்துக்காக திருமணம் செய்தவர் பெரியார்.'' எனக் கூறியிருந்தார்.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் நேற்று தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''மனித குலத்தின் சமூக விடுதலைக்கான மாபெரும் தலைவர் பெரியார். தன் வாழ்நாளின் கடைசி நாட்கள் வரை சமூக நீதிக்காகச் சளைக்காமல் பாடுபட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் அவர். தன் மனதில் தோன்றிய சிந்தனைகளை எவருக்கும் அஞ்சாமல் துணிந்து கூறியவர். அவருடைய பகுத்தறிவு - சுயமரியாதைச் சிந்தனைகள் சமுதாயத்தின் இருட்டை விரட்டி வெளிச்சத்தை உண்டாக்கின. தன்னுடைய கருத்துகளாகவே இருந்தாலும் அதனைக் கேட்பவர்கள் தங்களுடைய சொந்த புத்தியினால் சிந்தித்து, அதன் பிறகே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய உலகச் சிந்தனையாளர்.

மனிதர்களிடையே சாதி, மதம், மொழி, நிறம், பாலினம் என எந்தவகை ஏற்றத் தாழ்வும் இல்லாத சமத்துவச் சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர். அவருடைய கொள்கை உறுதியின் விளைவாக, தேர்தல் களத்தையே காணாமல் தன் இலட்சியங்களை அரசாங்கத்தின் சட்டங்களாகத் திட்டங்களாக மாறச் செய்து, தான் வாழும் காலத்திலேயே அவை நிறைவேறிடக் கண்டவர்.

'மண்டைச் சுரப்பை உலகு தொழும்' என அவரைப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடினார். கொள்கையில் எதிர்துருவமாக இருந்த ராஜாஜி, 'என் அன்பான எதிரி' என்று பெரியாரைப் பாராட்டினார். அவரோடு முரண்பட்டவர்களும்கூட அவருடைய தூய தொண்டினை, போராட்டக்குணத்தை, ஒளிவுமறைவின்றிக் கருத்துகளை வெளிப்படுத்தும் தன்மையைப் புகழ்ந்திடத் தவறவில்லை. ''ஈ.வெ.ரா.பெரியார் இந்த மண்ணின் மணாளர்'' என்று புகழ்ந்துரைத்தார் வ.ரா.

உயர்ந்த சிந்தனை கொண்ட மனிதர்கள், தெளிந்த உள்ளம் கொண்ட தலைவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் பெரியாரின் கருத்துகளை மதிப்பார்கள். அவருடைய தொண்டினைப் போற்றுவார்கள். பெரியார் எந்த நேரத்தில், எந்தச் சூழலில், என்ன சொன்னார் என்று பெரியார் சொன்ன பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து பார்த்துச் செயல்படுவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பதே தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து வந்து, அண்ணாவால் உருவாக்கப்பட்ட இயக்கம் தான். பெரியாரின் லட்சியத்தை அரசியல் வழியில் முன்னெடுத்தார் அண்ணா. அப்போது இரு இயக்கங்களுக்குமிடையிலான கருத்து மோதல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் கடந்துதான், 1967-இல் பெரியாரின் வாழ்த்துகளுடன் ஆட்சிப் பொறுப் பேற்று, இந்த ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை என்றார் அண்ணா.

பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சமபங்கு கொடுத்தவர் கலைஞர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றி, பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிட முனைந்தவரும் அவர்தான். அந்தச் சட்டத்தின்படி அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி ஆணை வழங்கி, முள்ளை அகற்றியவர் மாண்புமிகு முதலமைச்சர், பெரியாரின் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகவும், டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாளாகவும் கடைப்பிடிக்கிறது திராவிட மாடல் அரசு.

பெரியாரின் கொள்கைகளே இன்றும் தமிழ்நாட்டை வழிநடத்துகின்றன. அதனால்தான் இதனை 'பெரியார் மண்' என்று சொல்கிறோம். சில மண்ணாந்தைகளுக்கு இது புரிவதில்லை. பெரியார் என்ன சொன்னார், எப்போது சொன்னார் என்பது பற்றி தெரியாமலும், பெரியார் சொல்லாத வற்றையும்கூட அவர் சொன்னதாக அபாண்டமாக அவதூறு பரப்பியும், யாருக்கோ ஏஜெண்ட்டாக இங்கே அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் தற்குறிகள், தங்கள் சொந்த அரிப்பைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பெரியார் என்ற ஆலமரத்தின் மீது உரசிப் பார்க்கின்றன. இதற்கும் தொலைநோக்குச் சிந்தனையாளரான பெரியாரே நமக்கு வழிகாட்டுகிறார்.

''மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது கஷ்டமான காரியம்'' என்று 1936-ஆம் ஆண்டிலேயே குடிஅரசு ஏட்டில் பெரியார் எழுதியிருக்கிறார். அவர் சொல்லியுள்ளபடி, மானமற்ற கூட்டத்துடன் நாம் மல்லுக்கட்ட வேண்டியதில்லை. மானமும் அறிவும் உள்ளவர்கள் பெரியாரை இழிவு செய்ய மாட்டார்கள். பெரியார், தான் வாழும் காலத்திலேயே பல எதிர்ப்புகளை நேரடியாக எதிர்கொண்டு, லட்சியப் போராட்டத்தில் வெற்றி கண்டவர். தன் மீதான அவதூறுகளை தன் கொள்கைத் தடியால் அடித்து நொறுக்கி, சமுதாயத்திற்கு விடியலைத் தந்தவர். அறிவிலிகளின் அவதூறுகளால் அவர் புகழை ஒருபோதும் மறைக்க முடியாது.

தந்தை பெரியார் புகழை நாம் என்றென்றும் போற்றுவோம். அவர் மீது அவதூறு பரப்பி விளம்பரம் தேட நினைக்கும் இழிவான - மலிவான அரசியல் பேர்வழிகளைப் புறக்கணிப்போம். எதையாவது செய்து, தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கலாமா என நினைப்பார்களேயானால் சட்டம் தன் கடமையை நிச்சயம் செய்யும்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

### போலி வாக்காளர்களை சேர்க்க முயற்சி:

# டெல்லியில் கெஜ்ரிவால் வீட்டை முற்றுகையிட்ட பா.ஜ.க.வினர்

**புது டெல்லி, ஜன. 11-**

வாக்காளர் பட்டியலில் உத்தர பிரதேசம், பீகாரில் இருந்து வந்தவர்களை போலியாக சேர்க்க முயற்சி நடப்பதாக கூறிய கெஜ்ரிவாலை கண்டித்து அவர் வீட்டை பா.ஜ.க.வினர் முற்றுகையிட்டனர்.

டெல்லியில் அடுத்த மாதம் 5-ந்தேதி 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக சட்டமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. அரவிந்த் கெஜ்ரிவால் புது டெல்லி தொகுதியில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் பர்வேஷ் வர்மா போட்டியிடுகிறார். நியூடெல்லி தொகுதியில் தன்னை தோற்கடிப்பதற்காக 13 ஆயிரம் புதிய வாக்காளர்களுக்கான விண்ணப்பங்கள் கொடுக்கப் பட்டுள்ளது. இது டிசம்பர் 15 முதல் ஜனவரி 8 வரை நடைபெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் உத்தர பிரதேசம் மற்றும் பீகார் மாநிலத்தை சேர்ந்தவர்கள் என கெஜ்ரிவால் குற்றம் சாட்டியதுடன், தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்திருந்தார்.

இந்த நிலையில் கெஜ்ரிவால் புகாரை கண்டித்து பா.ஜ.க.-வைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டவர்கள் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டு அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களை தடுப்பதற்கான போலீசார் தடுப்புகள் அமைத்திருந்தனர். போராட்டக்காரர்கள் தடுப்புகளை மீறு கெஜ்ரிவால் வீட்டை முற்றுகையிட முயன்றனர். இதனால் போலீசார் தண்ணீர் பீய்ச்சி அடித்து அவர்களை விரட்டினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

### மத்திய பிரதேசத்தில் வினோதம்:

# ஹெல்மெட் அணியவில்லை என நடந்து சென்றவருக்கு அபராதம்

**போபால், ஜன. 11-**

நடந்து சென்றவருக்கு ஹெல்மெட் அணியவில்லை என அபராதம் விதித்த போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என எஸ்.பி.யிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் பன்னா மாவட்டத்தில் உள்ள அஜய்கர் பகுதியை சேர்ந்தவர் சுஷில் குமார் சுக்லா. இவர் தனது மகளின் பிறந்த நாள் விழாவிற்காக விருந்தினர்களை அழைப்பதற்கு சாலையோரமாக நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக காவல்துறை வாகனத்தில் சென்ற போலீசார் அவரை தடுத்தி நிறுத்தியதாகவும், பின்னர் அவரை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று சிறிது நேரம் காவலில் வைத்துவிட்டு, ஹெல்மெட் அணியவில்லை எனக்கூறி ரூ.300 அபராதம் விதித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த சுஷில் குமார் சுக்லா, இந்த சம்பவம் குறித்து மாவட்ட எஸ்.பி.யிடம் புகார் அளித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக அஜய்கர் துணை பிரிவு காவல் அதிகாரி ராஜீவ் சிங் பதோரியா தலைமையில் விசாரணை நடத்த மாவட்ட எஸ்.பி. உத்தரவிட்டுள்ளார்.

## இவர் தான் அந்த சார்: சட்டசபைக்கு பதாகைகளுடன் வந்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்களால் பரபரப்பு

**சென்னை, ஜன. 11-**

இவர் தான் அந்த சார் என்று அ.தி.மு.க.வுக்கு பதிலளிக்கும் விதமாக சட்டசபைக்கு பதாகைகளுடன் வந்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்களால் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.



அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை சுட்டிக்காட்டி, யார் அந்த சார்? என அ.தி.மு.க.வினர் எழுப்பிய கேள்விக்கு, அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட அக்கட்சி நிர்வாகியின் கையை சுட்டிக்காட்டி 'இவர் தான் அந்த சார்' என்ற பதாகைகளை ஏந்தியபடி சட்டப்பேரவைக்கு நேற்று வந்தனர்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி வெளிநபரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் மாநிலம் தழுவிய அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் தொடர்புடையதாக ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில், இவ்வழக்கில் வேறு ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து யார் அந்த சார்? என்ற கேள்வியை எதிர்க்கட்சியினர் முன்வைத்து, மாணவிக்கு நியாயம் கிடைக்க கோரி தீவிர போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் ஒருபகுதியாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. எம்எல்ஏ-க்கள் பேரவை வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து பேரவைக்கு கருப்பு சட்டை மற்றும் யார் அந்த சார்? என்ற பேட்ஜை அணிந்து அ.தி.மு.க உறுப்பினர்கள் தங்களது எதிர்ப்பை பதிவு செய்து வந்தனர். இதற்கிடையே அண்ணாநகரில் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் அ.தி.மு.க. நிர்வாகி சுதாகர் கைது செய்யப்பட்டார்.

இதை சுட்டிக்காட்டி 'இவர் தான் அந்த சார்' என்ற முழக்கத்தை சமூக வலைதளங்களில் தி.மு.க ஐடி பிரிவு பகிரத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக நேற்று (ஜன.10) பேரவைக்கு வந்த தி.மு.க. எம்எல்ஏ-க்கள் 'இவர் தான் அந்த சார்' என்ற பதாகைகளை எடுத்து வந்து பேரவை வளாகத்தில் முழக்கங்களை எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் தி.மு.க எம்எல்ஏ பரந்தாமன் பேசுகையில், "பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்துக்கு புலன் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, விசாரணையில் சொல்லப்பட்ட வார்த்தைகளை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சியினர் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் குறித்து வெளியில் பேசுவது சட்டத்துக்கு புறம்பானது.

விசாரணையில் தான் யார் என்று கண்டறிந்து, அவர்களை நீதிமன்றம் முன் நிறுத்த முடியும். இதை புரிந்து கொள்ளாத அ.தி.மு.க. உறுப்பினர்கள், விடை தெரியாது போல கருப்பு சட்டை, யார் அந்த சார்? என்ற பேட்ஜ் அணிந்து சட்டப்பேரவை நடவடிக்கைகளில் எம் எல்ஏ-க்கள் பங்கேற்கின்றனர். அரசின் பொறுப்பு விடை கொடுப்பது. அந்த வகையில் 'இவர் தான் அந்த சார்' என்பதை வெளிச்சம் போட்டு காடியுள்ளோம், என்றார்.

## பாடகர் ஜெயச்சந்திரன் மறைவு: பிரதமர் நரேந்திரமோடி இரங்கல்

**புதுடெல்லி, ஜன.11-**

பாடகர் ஜெயச்சந்திரன் மறைவிற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

பிரபல பின்னணி பாடகர் ஜெயச்சந்திரன் (80) உடல்நலக் குறைவால் கேரளாவின் திருச்சூரில் நேற்று முன்தினம் காலமானார். தமிழ், மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் 15,000க்கும் மேற்பட்ட பாடல்களை ஜெயச்சந்திரன் பாடியுள்ளார். இவர் இந்திய தேசிய திரைப்பட விருதை ஒருமுறையும், தமிழக அரசின் மாநில திரைப்பட விருதை நான்கு முறையும், கேரள மாநில திரைப்பட விருதை நான்கு முறையும் பெற்றுள்ளார்.

1997ம் ஆண்டு தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.அவரது மறைவிற்கு அரசியல் கட்சி தலைவர்கள், சினிமா பிரபலங்கள் என பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பிரபல பின்னணி பாடகர் ஜெயச்சந்திரன் மறைவிற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

ஜெயச்சந்திரன் பலவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பழம்பெரும் குரலால் ஆசீர்வதிக்கப்பட்டவர். பல்வேறு மொழிகளில் அவரது ஆத்மார்த்தமான பாடல்கள் வரும் தலைமுறையினரின் இதயங்களை தொடும். அவரது மறைவால் வேதனை அடைந்தேன். இந்த துயரமான நேரத்தில் எனது எண்ணங்கள் அவரது குடும்பத்தினருடனும் ரசிகர்களுடனும் உள்ளன என பதிவிட்டுள்ளார்.

## டெல்லியில் குடியரசு தின விழா: 10 ஆயிரம் பேருக்கு அழைப்பு

**புதுடெல்லி, ஜன.11-**

டெல்லி குடியரசு தின விழாவில் பங்கேற்க 10 ஆயிரம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் மக்களின் பங்கேற்பை அதிகரிப்பதை மத்திய அரசு நோக்கமாக கொண்டு உள்ளது. இதன் அடிப்படையில் பல்வேறு முக்கிய விழாக்களுக்கு சாமானிய மக்களும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுகிறார்கள். இதன்படி டெல்லி கடமைப்பாதையில் வருகிற 26-ந் தேதி நடைபெறும் குடியரசு தின விழாவில் பங்கேற்பதற்கும் பொதுமக்களில் பல தரப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. இந்த வகையில் 10 ஆயிரம் பேர் அழைப்பை பெறுகிறார்கள்.

கிராமத்தை கவனிக்கும் முக்கிய நபர்கள், பேரிடர் நிவாரண பணியாளர்கள், சிறந்த கிராமங்களின் முக்கியஸ்தர்கள், வனம் மற்றும் வனவிலங்கு பாதுகாவலர்கள், கைவினைஞர்கள், கைத்தறி கைவினைஞர்கள், பல்வேறு திட்டங்களின் சாதனையாளர்கள், அங்கீகாரம் பெற்ற சமூகநல ஆர்வலர்கள், 'மன் கி பாத்' பங்கேற்பாளர்கள், பாரா ஒலிம்பிக் வீரர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்பட 31 பிரிவுகளில் பொதுமக்கள் அழைக்கப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் குடியரசு தின விழாவில் பங்கேற்பது மட்டும் அல்லாமல் தேசிய போர் நினைவிடம், பிரதமர் சங்கராலயா போன்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். குடியரசு தின விழாவில் ஒவ்வொரு ஆண்டும் பிற நாடுகளின் தலைவர்களும் முக்கிய விருந்தினராக பங்கேற்பார்கள். அந்த வகையில் இந்த ஆண்டு இந்தோனேஷிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்தாய் வாழ்த்து உள்ளிட்ட விவகாரங்களில் முதல்வர் ஸ்டாலின் - இ.பி.எஸ். இடையே காரசாரமான விவாதம்

**சென்னை, ஜன. 11-**

நீட் தேர்வு ரத்து, தமிழ் தாய் வாழ்த்து உள்ளிட்ட விவகாரங்களில் நேற்று சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின், இ.பி.எஸ். இடையே காரசார விவாதம் நடந்தது. 'நீங்கள் இரட்டை வேடம் போடுகிறீர்கள்' என எடப்பாடி பழனிசாமி கூற.. 'நீங்கள் நான்கு வேடம் போடுபவர்கள்' என முதல்வர் ஸ்டாலின் பதிலடி கொடுத்தார்.

நடப்பாண்டின் முதல் தமிழக சட்டசபை தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று சட்டசபை 5வது நாள் கூட்டம் தொடங்கி நடைபெற்றது. அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே காரசார விவாதம் நடைபெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:-

**எடப்பாடி பழனிசாமி:** தமிழ்த்தாய் வாழ்த்தை நேரலையில் காட்டவில்லை. தமிழ்த்தாய் வாழ்த்துக்கு அவ்வளவுதான் மரியாதையா?

**சபாநாயகர்:** இதில் உள்நோக்கம் எதுவும் இல்லை. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக லைவ் செய்ய முடியவில்லை.

**எடப்பாடி பழனிசாமி:** கவர்னர் உரையை கவர்னர் வாசிக்கவில்லை. சபாநாயகர் தமிழில் வாசித்த உரையாகத்தான் கருத முடிகிறது. தாலிக்கு தங்கம் உள்ளிட்ட திட்டங்களை இந்த அரசு கைவிட்டுவிட்டது. பெரியார், அண்ணா, அம்பேத்கர் பெயர்களை ஏற்கனவே கவர்னர் உரையில் அவர் வாசிக்கவில்லை. அப்போது எல்லாம் கவர்னரை கண்டித்து நீங்கள் போராட்டம் நடத்தவில்லை.

**முதல்வர் ஸ்டாலின்:** எதிர்க்கட்சித் தலைவரின் உடல்நலம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என வாழ்த்துகிறேன். இம்முறை கவர்னர் முழுவதும் உரையை படிக்காமல் சென்றுள்ளார். அதனால்தான், உடனே போராட்டம் நடத்தினோம்.

**எடப்பாடி பழனிசாமி:** அதிமுக பொதுக்கூட்டங்களுக்கு நீதிமன்றம் சென்றுதான் அனுமதி வாங்க வேண்டியுள்ளது.

**முதல்வர் ஸ்டாலின்:** எங்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதோ, அங்குதான் போராட்டம் நடத்த அனுமதிக்க முடியும்.

**எடப்பாடி பழனிசாமி:** நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என கூறினீர்கள்.

**முதல்வர் ஸ்டாலின்:** இப்போதும் நிச்சயமாக சொல்கிறோம். எங்கள் கருத்தில் மாற்றம் இல்லை. நீட் தேர்வை ரத்து செய்வதுதான் எங்கள் வேலை. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு விலக்கு இருக்கும் என ராகுல் காந்தி கூட கூறியிருந்தார். நாங்கள் இருந்தவரையில் நீட் தேர்வு இல்லை. நீங்கள் வந்த பிறகுதான் நீட் தேர்வு உள்ளே வந்தது.

**எடப்பாடி பழனிசாமி:** நீட் தேர்வுக்கு பிள்ளையார் சுழி போட்டது நீங்கள் இருந்த ஆட்சிதான்.

**முதல்வர் ஸ்டாலின்:** தவறான கருத்தை பதிவு செய்ய வேண்டாம். நாங்கள் கூட்டணியில் இருந்தாலும் நீட் தேர்வை ஏற்கவில்லை. வரவும் விடவில்லை.

**எடப்பாடி பழனிசாமி:** இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வரும் வாய்ப்பு குறைந்துபோய்விட்டது. நீங்கள் நூற்றாண்டு நாணயம் வெளியிடும்போது பாஜக அமைச்சரை அழைத்து வெளியிட்டீர்கள்.

**முதல்வர் ஸ்டாலின்:** மத்திய மந்திரியாக உள்ளவரை அழைத்து வெளியிட்டோம். அதில் என்ன தவறு உள்ளது ?

**எடப்பாடி பழனிசாமி:** நீங்கள் இரட்டை வேடம் போடுகிறீர்கள்.

**முதல்வர் ஸ்டாலின்:** நீங்கள் நான்கு வேடம் போடுபவர்கள்.

**அமைச்சர் துரை முருகன்:** அவர்கள் (அதிமுகவினர்) வெளிநடப்பு செய்யப்போகிறார்கள். அதற்காக தயாராக வந்துள்ளனர்.

இவ்வாறு அந்த விவாதம் இருந்தது.

## 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு கலங்கரை விளக்கம் - நீலாங்கரை இடையே விரைவில் கடல் பாலம்

### சட்டசபையில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்

**சென்னை, ஜன. 11-**

கலங்கரை விளக்கம் மற்றும் நீலாங்கரை இடையே 15 கி.மீ. தூரத்திற்கு கடல் பாலம் அமைக்கப்படும் என்று பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் பேரவைத் துணை தலைவர் பிச்சாண்டி, "நவி மும்பையில் கட்டப்பட்ட அடல் சேது பாலம் போன்று, இங்கும் பட்டினப்பாக்கத்தில் இருந்து மகாபலிபுரம் வரை கடல் பாலம் அமைத்தால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கலாம், இடம் கையகப்படுத்தும் பணியும் இருக்காது. மும்பையில் பாலங்கள் அமைப்பதற்கு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டு பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல் தமிழகத்திலும் கடல்சார் வாரியம் அமைக்கப்படுமா" என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது: தமிழகத்தில் கடல்சார் வாரியம் முன்னதாகவே உள்ளது. அதன்மூலம் சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மும்பை பாலத்தில் நானும் பயணித்தேன். அதன் விளைவாக, கலங்கரை விளக்கத்தில் இருந்து மகாபலிபுரம் என்பது நீண்ட தொலைவாக இருப்பதால், முதல்கட்டமாக கலங்கரை விளக்கத்தில் இருந்து நீலாங்கரை இடையே 15 கி.மீ. தூரத்திற்கு கடல் பாலம் அமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியில் பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்." என்று தெரிவித்தார்.

## சனாதனத்தை மதிப்பவர்கள் கும்பமேளாவுக்கு வரலாம்

### உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் அழைப்பு

**புதுடெல்லி, ஜன.11-**

தம்மை ஒரு இந்தியன் என எண்ணுபவர்களும், சனாதனம் மீது மரியாதை கொண்டவர்களும் கும்பமேளாவுக்கு வரலாம் என உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் இந்த முறை ஜனவரி 13-ல் மகா கும்பமேளா துவங்குகிறது. இந்த மகா கும்பமேளாவில் முஸ்லிம்கள் எவரும் கடைகளை நடத்தக் கூடாது என துறவிகளின் சபைகளான அகாடாக்கள் வலியுறுத்தின. இந்தச் சூழலில், மகா கும்பமேளாவில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்ற பேச்சுக்களும் எழுந்தன. இந்தப் பின்னணியில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் வெள்ளிக்கிழமை முதல்வர் யோகி ஆதித்யநாத் கலந்து கொண்டார். அப்போது கும்பமேளா திடலில் முஸ்லிம்களின் அனுமதி குறித்த கேள்வி முதல்வரிடம் எழுப்பப்பட்டது. இதற்கு விரிவான பதிலை முதல்வர் யோகி அளித்துள்ளார்.

துறவியும், கோரக்நாத் மடத்தின் தலைவருமான முதல்வர் யோகி கூறும்போது, 'தம்மை ஒரு இந்தியன் என எண்ணுபவர்களும், சனாதனம் மீது மரியாதை கொண்டவர்களும் கும்பமேளாவுக்கு வரலாம். சிலரது மூதாதையர்கள் தம் கடவுளை வணங்க, கட்டாயத்தின் பேரில் தமது மதமாக இஸ்லாத்தை ஏற்றனர். எனினும், அவர்களும் இந்தியக் கலாச்சாரத்தின் மீது பெருமை கொண்டவர்களாக உள்ளனர்.

மேலும், அவர்கள் தங்கள் கோத்திரத்தை இந்தியாவின் முனிவர்களின் பெயருடன் தொடர்புபடுத்துகிறார்கள். இதேநிலையில் அவர்கள் இந்திய பண்டிகைகள் மற்றும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்கின்றனர். இது போன்றவர்கள் தங்கள் கலாச்சாரத்தின்படி கும்பமேளாவின் சங்கமத்தில் புனித நீராடல் செய்ய விரும்பி வந்தால் பிரச்சினை இல்லை. இதற்காக வருபவர்கள் வரவேற்கப்படுவார்கள். ஆனால், சிலர் இந்த கும்பமேளா நிலம் தம்முடையது போன்ற சிந்தனைகளில் வந்தால் அவர்களது ஒடுக்குமுறைகளை எடுத்து புதிய வர்ணம் பூசுவது அவசியமாகிறது.' எனத் தெரிவித்தார்.

முன்னதாக சில தினங்களுக்கு முன்பு உத்தரப் பிரதேசத்தின் பரேலி மவுலானாவான முப்தி ஷ்காபுத்தீன் ரிஜ்வி கூறியக் கருத்து பெரும் சர்ச்சையானது. அகில இந்திய முஸ்லிம் ஜமாத்தின் தலைவரான இவர், பிரயாக்ராஜில் கும்பமேளா நடைபெறும் இடம் மாநிலத்தின் வக்பு வாரியத்திற்கு சொந்தமானது எனக் குறிப்பிட்டிருந்தார்.

மவுலானாவின் இந்தக் கருத்திற்கு பல முஸ்லிம் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதையேதான் முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் தனது பதிலில் தெரிவித்துள்ளதாகக் கருதப்படுகிறது.

மவுலானவின் கருத்து குறித்து முதல்வர் யோகி கூறுகையில், 'கும்பமேளா நிலத்தை தங்களுடையது எனத் தவறாகக் கூறுவது வக்பு வாரியமா அல்லது நில மாபியாவா? இந்த உண்மையை கண்டறிய நாம் 1363 ஆம் ஆண்டு முதலான ஆவணங்களைப் பார்க்க வேண்டி உள்ளது. அதில் இந்த நிலம் யாருடையதாக இருந்தது என்பதை கண்டறிந்து ஆராய்ந்த பின் அவருக்கு பதிலளிக்கிறேன். 'எனக் கூறியிருந்தார். ஜனவரி 13ம் தேதி துவங்கும் மகா கும்பமேளாவுக்கு நாற்பது கோடிக்கும் அதிகமானோர் வருகை தருவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

## காட்டு பன்றியை சுட்டுப்பிடிக்க இனி வனத்துறைக்கு அனுமதி

### சட்டசபையில் அமைச்சர் பொன்முடி தகவல்

**சென்னை, ஜன.11-**

விவசாயிகளின் பயிர்களை சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை சுட்டுப்பிடிக்க வனத்துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சட்டப்பேரவையில் வனத்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

காட்டுப் பன்றிகளின் தொல்லையால் விளை நிலங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதற்கு பதிலளித்து வனத்துறை அமைச்சர் பொன்முடி பேசியதாவது:

"காட்டுப் பன்றிகளிடம் இருந்து விவசாயிகளைக் காக்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு சில பரிந்துரைகளைக் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் அரசாணை தயார் செய்து நேற்று முன்தினம் (ஜன. 9) முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். அதன்படி, காப்புக்காட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவு வரை உள்ள பகுதிக்கு வரும் காட்டுப்பன்றிகளைச் சுட அனுமதியில்லை. காப்புக்காட்டிலிருந்து 1 கி.மீ. - 3 கி/மீ. தொலைவு வரை உள்ள பகுதிக்கு வரும் காட்டுப்பன்றிகளைப் பிடித்து திருப்பி அனுப்ப வேண்டும். அதற்காக வனத்துறை அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். காட்டுப் பன்றிகள் 3 கி.மீ.-க்கு அப்பால் வருமானால் காட்டுப் பன்றிகளை சுட்டுப்பிடிக்க வனத்துறை அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாணையில் கூறப்பட்டுள்ளது. விவசாயிகளே காட்டுப் பன்றிகளை சுடுவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்யப்படும்" என்று பொன்முடி தெரிவித்தார்.

## மேட்டுப்பாளையம் அருகே விபத்தில் 2 ஐயப்ப பக்தர்கள் பலி

**மேட்டுப்பாளையம், ஜன.11-**

மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை பால்காரன் சாலைப் பகுதியில் ஐயப்ப பக்தர்கள் வந்த கார், சாலையோரத்தில் இருந்த மரத்தில் மோதி விபத்துக்கு உள்ளானதில் 2 ஐயப்ப பக்தர்கள் பலியாகினர்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் பகுதியில் இருந்து கேரளத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு மாலை அணிந்துக் கொண்டு 5 பேர் காரில் பயணித்துள்ளனர். ஐயப்பன் கோயிலில் சாமி தரிசனத்தை முடித்துவிட்டு நேற்று அதிகாலை சிறுமுகை சத்தியமங்கலம் சாலையில் 5 பேரும் காரில் சென்று கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், கோவை மாவட்டம் சிறுமுகை அருகே உள்ள பால்காரன் சாலைப் பகுதியில் கார் சென்றுகொண்டிருந்தபோது, காரை ஓட்டி வந்த சுவாமி என்பவர் தூக்கக் கலக்கத்தில் காரை சாலை ஓரத்தில் இருந்த புளிய மரத்தின் மீது மோதியுள்ளார். இந்த விபத்தில் நாகராஜ் மற்றும் வெங்கடாஆதிரி சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 3 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டு மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து குறித்து சிறுமுகை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தூக்கக் கலக்கத்தில் ஓட்டுநரின் அலட்சியத்தால் ஏற்பட்ட இந்த விபத்தில் ஐயப்ப பக்தர்கள் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கவுன்சிலர்களை தாக்கியதாக வழக்கு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுவிப்பு

**சென்னை, ஜன.11-**

கவுன்சிலர்களை தாக்கியதாக தொடரப்பட்ட வழக்கில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்பட 7 பேரை விடுவித்து சிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2002-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்ற கூட்டம் அப்போதைய துணை மேயர் கராத்தே தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க., சென்னை கண்ணப்பர் திடலில் மீன் அங்காடி அமைக்கும் டெண்டர் தொடர்பான பிரச்சினையை கிளப்பியது. இதுதொடர்பாக, அந்த கூட்டத்தில் அ.தி.மு.க., தி.மு.க. கவுன்சிலர்கள் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் தி.மு.க. கவுன்சிலர்கள் அங்கிருந்த 'மைக்' மற்றும் நாற்காலிகளை அ.தி.மு.க. கவுன்சிலர்கள் மீது தூக்கி வீசினர். இதில், அப்போதைய அ.தி.மு.க. கவுன்சிலர்கள் ஜீவரத்தினம், பரிமளா, மங்கையர்க்கரசி, குமாரி உள்ளிட்டோருக்கு காயம் ஏற்பட்டது.

இதுதொடர்பாக அ.தி.மு.க. கவுன்சிலர்கள் அளித்த புகாரின்பேரில் சென்னை பெரியமேடு போலீசார், அப்போதைய தி.மு.க. கவுன்சிலர்களான அமைச்சர் மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.எல்.ஏ. வி.எஸ்.பாபு, சிவாஜி, தமிழ்வேந்தன், நெடுமாறன், செல்வி சவுந்தரராஜன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்தனர்.

பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்த இந்த வழக்கில், 2019-ம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை சென்னை கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் நடந்து வந்தது. வழக்கில் விசாரணை நிறைவடைந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.எல்.ஏ. வி.எஸ்.பாபு, சிவாஜி, தமிழ்வேந்தன், நெடுமாறன், செல்வி சவுந்தரராஜன், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோரை விடுவித்து சிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சாட்சியம் அளித்தவர்கள் பிறழ்சாட்சியாக மாறியதாலும், சரிவர நிரூபிக்காததாலும் மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோரை விடுவித்து சிறப்பு கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## பொங்கல் தொகுப்போடு ரூ.2,000 வழங்க பா.ஜ.க. மனுவை அவசர வழக்காக விசாரிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு

**சென்னை, ஜன. 11-**

பொங்கல் தொகுப்போடு ரூ.2000 வழங்க கோரி பா.ஜ.க. வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், பா.ஜ.க. வழக்கறிஞர் ஏற்காடு ஏ.மோகன் தாஸ் சார்பாக வழக்கறிஞர் ஜி எஸ் மணி ஒரு பொதுநல மனுவை தாக்கல் செய்திருந்தார். அதில், "கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் தமிழக மக்கள் பெரும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களது உடைமைகளையும் பொருளாதாரத்தையும் இழந்து, விவசாய பயிர்கள் முற்றிலுமாக நாசமாகி, அனைத்து தரப்பு மக்களும், மிகப்பெரிய சோகத்தில் உள்ளனர். எனவே, பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட, கடந்த ஆண்டை போல, தமிழக அரசு இந்த ஆண்டும் அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் தலா ரூ.2000 வழங்க உத்தரவிட வேண்டும்." என்று கூறியிருந்தார்.

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஸ்ரீ ராம் அமர்வில், நேற்று மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று முறையிட்டார்.

பொங்கல் பண்டிகை இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வரவுள்ளதால், வழக்கை அவசர வழக்காக விசாரித்து, தகுந்த நிவாரணம் அளிக்க உத்தரவிட வேண்டும் என்று முறையிட்டார். ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் அவசர வழக்காக விசாரிக்க முறையிட்டும், வழக்கு விசாரணைக்குப் பட்டியலிடப்படவில்லை என்று முறையிட்டார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி ஸ்ரீராம், இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என்று நாங்கள் ஏற்கெனவே நிராகரித்த பிறகும், இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க கூறுவதை ஏற்க முடியாது.

இது போல, தொடர்ந்து அவசர வழக்காக விசாரிக்க கோரி முறையிட்டால், மனுதாரருக்கு எதிராக அபராதம் விதிக்கப்படும். இந்த பொதுநல மனுவை, அவசர வழக்காக விசாரிக்க முடியாது என்றுகூறி, மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாட்டு மக்கள் மீது கடந்த 3 ஆண்டுகளாக மின் கட்டண உயர்வு சுமத்தப்பட்டு இருக்கும் நிலையில், மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மின் கட்டணம் உயர்த்தப்பட்ட பிறகும் மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவது ஏன்..? என்பது குறித்து விசாரணை நடத்த ஆணையிட வேண்டும்.

- அன்புமணி



மிகக்குறைவான ஊதியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் பகுதிநேர ஆசிரியர்களை உடனடியாக பணிநிரந்தம் செய்வதோடு, வரவிருக்கின்ற பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட ஏதுவாக போனஸ் தொகையையும் தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

- டி.டி.வி. தினகரன்



பகுத்தறிவு - சமத்துவம் - பெண் விடுதலை - அறிவியல் வளர்ச்சி - தமிழ்நாட்டின் முன்னேற்றம் எனும் முற்போக்கு சிந்தனைகளை முன்வைக்கும் அனைவருக்கும் தந்தை பெரியாரே தலைவர். அதற்கெதிரான கருத்தியல் கொண்டவர்கள் அவரை எதிர்த்து எதிர்த்து ஓய்ந்து போகட்டும். சூரியனை எதிர்ப்பவர்கள் சூடுபட்டுத்தான் திருந்துவார்கள்.

- கனிமொழி



உழவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டும், அவர்கள் சாகுபடி செய்த நெல்லுக்கு ஓரளவாவது நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் காவிரி பாசன மாவட்டங்கள் உள்பட தமிழ்நாடு முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அதிக எண்ணிக்கையில் திறக்க வேண்டும்.

- ராமதாஸ்

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# திருமங்கலத்தில் வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை அமோகம்



திருமங்கலம், ஜன. 11-

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் சந்தைப் பேட்டையில் வெள்ளிக்கிழமை தோறும் ஆட்டுச் சந்தை நடைபெறுவது வழக்கம். தமிழகத்தின் பெரிய ஆட்டுச் சந்தைகளில் ஒன்றாக கருதப்படும் இந்த ஆட்டுசந்தையில் மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, கோவில்பட்டி, திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து வியாபாரிகள் வருகை தந்து ஆடுகள் கோழிகளை வாங்கி செல்வது வழக்கம்.

இந்நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நேற்று அதிகாலை 4 மணிக்கு தொடங்கிய ஆட்டு சந்தையில் வழக்கத்தைவிட அதிகளவு கூட்டம் காணப்பட்டது 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ஆடுகள் வரை விற்கப்பட்டது. வருகிற செவ்வாய்க்கிழமை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்த வார வெள்ளிக்கிழமை ஆட்டுச் சந்தையில் தற்போது 12 முதல் 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆடுகள் விற்கப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர். நேற்று ஒரே நாளில் 4 கோடி ரூபாய்க்கு மேல் ஆடுகள் விற்பனையானது.

கட்டுக்கடங்காத கூட்டத்தில் ஆடு வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கடந்த பொங்கல் பண்டிகையை விட இந்த ஆண்டு ஆடுகள் விற்பனை சற்று அதிகமாக இருந்ததாகவும் பொங்கல் பண்டிகை முடிந்த பின் ஆட்டின் விலை கட்டுக்குள் வரும் எனவும் வியாபாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.



**திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகளின் பொங்கல் விழா முதல்வர் பொறுப்பு சங்கரன் தலைமையில் நடைபெற்றது. பொங்கல் விழாவையொட்டி மாணவிகளின் கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் செவிலியர் ஆசிரியர்கள் கீதா, ரம்ஜான் பேகம், சாரதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**

# மானாமதுரையில் சமத்துவ பொங்கல் விழா



மானாமதுரை, ஜன. 11-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, கன்னார் தெருவில் ஆதரவு அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளையில் பெண்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி, பியூட்டிசியன் பயிற்சி போன்ற சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. தமிழக முழுவதும் வரும் செவ்வாய் கிழமை அன்று பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது இதனை முன்னிட்டு ஆதரவு அறக்கட்டளையின் சார்பாக நேற்று சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெண்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற பெண்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் சேவியர்,பாரதி அச்சக உரிமையாளர் தேவதாஸ், தொழிலதிபர் சரவணன், ஆதரவு அறக்கட்டளையின் நிறுவனர் செல்வம் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

# நத்தம்: மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுடன் பொங்கல் கொண்டாடிய தன்னார்வலர்கள்



நத்தம், ஜன. 11-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்- மீனாட்சிபுரம் பகுதியில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது.இந்த பள்ளியில் நேற்று முன்தினம் சேவை நண்பர்கள் என்ற தன்னார்வ அமைப்பு மூலம் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி பள்ளி வளாகத்தில் கரும்புகள், தோரணங்கள் அமைக்கப்பட்டு பொங்கல் வைக்கப்பட்டது. தொடர்ந்து குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் நத்தம் பகுதியை சேர்ந்த சேவை நண்பர்கள் குழு,பசியில்லாநத்தம் குழுவினர் கலந்து கொண்டனர்.

### பரமக்குடியில் பெருமாள் கோவில்களில்

# சொர்க்கவாசல் திறப்பு- பக்தர்கள் சாமி தரிசனம்



பரமக்குடி, ஜன. 11-

பரமக்குடியில் உள்ள பெருமாள் கோயில்களில் நேற்று அதிகாலை சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் மற்றும் எமனேஸ்வரம் வரதராஜ பெருமாள் கோவில்களில் மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு நேற்று அதிகாலை 4 மணி அளவில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கோவில்களில் நடந்த வைகுண்ட ஏகாதசி விழாவில் பரமபத வாசல் வழியாக பக்தர்களுக்கு பெருமாள் அருள் பாலித்தார்.

பரமக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். நேற்று முன்தினம் பகல் பத்து உற்சவம் நடைபெற்றது. நேற்று காலை சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. நேற்று மாலை பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.இந் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் தேவஸ்தான டிரஸ்டிகள் செய்திருந்தனர்.



**திண்டுக்கல் எம்.வி.எம். நகர் தென் திருப்பதி கோவிலில் வைகுண்ட ஏகாதேசியை முன்னிட்டு சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.**

# திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரியில் பள்ளிகளுக்கு கிடையே அறிவியல் கண்காட்சி

திண்டுக்கல், ஜன. 11-

திண்டுக்கல் ஜி.டி.என் கலைக்கல்லூரியில் பள்ளிகளுக்கிடையேயான மாபெரும் அறிவியல் கண்காட்சி கல்லூரியில் உள்ள டாக்டர் அப்துல்கலாம் அரங்கில் நடந்தது. கல்லூரி முதல்வர் முனைவர் சு. சரவணன் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் அரிமா டாக்டர் ரத்தினம் தலைமையுரையாற்றினார். கல்லூரியின் இயக்குநர் துரை, கல்வி இயக்குனர் மார்க்காண்டேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திண்டுக்கல் மாவட்டக் கல்வி அதிகாரி நாகேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளின் அவசியத்தை எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்.

இதில் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு பள்ளிகள் கலந்து கொண்டன. 15 அரசுப் பள்ளிகள் 55கண்டுபிடிப்பு மாதிரிகளையும், 6 அரசு உதவி பெறும் பள்ளிகள் 38 அறிவியல் கண்டுபிடிப்பு மாதிரிகளையும்,6 சி.பி.எஸ்.ஸி. பள்ளிகள் 24 மாதிரிகளையும், 7 மெட்ரிக் பள்ளிகள் 24 மாதிரிகளையும் காட்சிப்படுத்தினர், இந்நிகழ்வு இளம் விஞ்ஞானிகளை அடையாளப் படுத்துவதாக அமைந்திருந்தது. தமிழகம் அறிவியல் கண்டுபிடிப்பில் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது என்பதற்கு இக்கண்காட்சி முன் உதாரணமாக அமைந்திருந்தது. சுய உதவிப் பிரிவின் துணைமுதல்வர் நடராஜன் நன்றி கூறினார்.

மாணவர்கள் காட்சிப்படுத்திய கண்டுபிடிப்புகளை நடுவர்கள் பார்வையிட்டுப் பரிசுக்கான மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர். முடிவில் விழா அவைச்சான்றோர்கள் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்வினைத் துவக்கி வைக்க மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி உஷா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அரசுப் பள்ளி, அரசு உதவிப்பெறும் பள்ளி மெட்ரிக் பள்ளி, சி.பி. எஸ்.ஸி பள்ளி ஆகிய நான்கு பிரிவுகளிலும் சுமார் 400 மாணவர்கள் தங்களது அறிவியல் கண்டுபடிப்புகளைக் காட்சிப்படுத்தினர். ஒவ்வொரு பிரிவிலும் ஆறு பரிசுகளுக்கு உரிய மாணவர்கள் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசாக ரூ. 7 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ. 6 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ. 5ஆயிரம், நான்காம் பரிசாக ரூ. 4ஆயிரம் ஐந்தாம் பரிசாக ரூ. 3ஆயிரம் ஆறாம் பரிசாக ரூ. 2ஆயிரம் என ரொக்கத் தொகை பிரித்துப் பரிசுகள் வழங்கப்பட்டன. முதன்மைக் கல்வி அதிகாரி உஷா பரிசு வழங்கி வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டினார். கல்லூரியின் துணைமுதல்வர் முனைவர் ம. பொன்னையா நன்றியுரை நவில நாட்டுப்பண்ணுடன் அறிவியல் கண்காட்சி முடிவடைந்தது. விலங்கியல் துறையின் துறைத்தலைவர் முனைவர் ஜீவலதா, வேதியியல் துறையின் உதவிப் பேராசிரியர் கேப்டன் முனைவர் எம். பாண்டீஸ்வரன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டு அறிவியல் கண்காட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# அமேசான் இந்தியாவில் புதிய எக்கோ ஸ்பாட் அறிமுகம்

கோவை, ஜன 11-

அமேசான் இந்தியாவில் அனைத்து புதிய எக்கோ ஸ்பாட் அறிமுகப்படுத்தியுள்ளது, இதில் அலெக்சா - செயல்படுத்தப்படும் எக்கோ சாதனங்களின் வரிசையில் சமீபத்திய கூடுதலாகும். எக்கோ ஸ்பாட் என்பது ஒரு நேர்த்தியான புதிய ஸ்மார்ட் அலாரம் கடிகாரமாகும், இதில் பல்வேறு வழக்கமகா- வடிவமைக்கப்பட்ட கடிகார தோற்றங்கள், வண்ணமயமான காட்சி விருப்பங்கள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட நான்கு அலாரம் ஒலிகள் உள்ளன. செயல்பாட்டுடன் இணைந் ஸ்டைல், எக்கோ ஸ்பாட் அவர்களுக்கு ஏற்றவாறு மற்றும் குஸ்டோமிசப்ளே டிஸ்பிலே வாடிக்கையாளர்களை அலாரங்களை பார்க்கவும், நேரம், வானிலை அல்லது பாடல் தலைப்புகளை ஒரே பார்வையில் பார்க்கவும் மற்றும் அதன் திசை ஸ்பீக்கருடன் அதிர்வலைகளின் ஒலியை அனுபவிக்கவும் அனுமதிக்கிறது.

எக்கோ ஸ்பாட் கருப்பு மற்றும் நீல நிறத்தில் கிடைக்கும், குறிப்பிட்ட ட கால சலுகையில் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகமாகிறது. ரூ. 6,449 எங்கள் அளவிலான சாதனங்கள் மூலம், எங்கள் வாடிக்கையாளர்களின் அன்றாட வாழ்வில் அதிக வசதியையும் நன்மையை சேர்க்க நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம். எக்கோ குடும்பச் சாதனங்களில் புதிதாகச் சேர்க்கப்படும் எக்கோ ஸ்பாட், இந்த அர்ப்பணிப்பைத் தொடர்ந்து வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் மெதுவாக விழித்துக் கொள்ளலாம். பிடித்த இசை, அலெக்சா -இணக்கமான ஸ்மார்ட் விளக்குகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வானிலை மற்றும் அவற்றின் காலெண்டரைப் பார்க்கவும். அலெக்சா அவர்களின் படுக்கையின் வசதியிலிருந்து குரல் கட்டளைகளை எழுப்புவதன் மூலம் அமேசான் Devices India. நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் கன்ட்ரி மேனேஜரான பராக் குப்தா கூறுகையில், வண்ணமயமான, குஸ்டோமிசப்ளே டிஸ்பிலே கூடிய அதன் அழகியல் வடிவமைப்பு எந்த படுக்கையறை அமைப்பையும் மேம்படுத்த உதவுகிறது என்று கூறினார்.

# அனைத்துத்துறை திட்டப்பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர்-கைத்தறித்துறை இயக்குநர் ஆய்வு



விருதுநகர், ஜன. 11-

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், தலைமையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சண்முகசுந்தரம், அனைத்துத்துறை திட்டப்பணிகள் குறித்து தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், கடந்த கூட்டத்தில் திட்டப் பணிகள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டது. ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை உரிய காலத்தில் முடிக்க வேண்டும்.இந்த நிதியாண்டின் இலக்கை ஏய்திட போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலைக்கான உத்தரவு பிரபபித்தவுடன் எவ்வித காலதாமதம் இன்றி உடனடியாக பணிகளை தொடங்க வேண்டும்.

வீட்டில் வைத்து பிரசவம் பார்த்தாலோ அல்லது வாட்ஸ்-அப்பில் வரும் தகவல்களை வைத்து பிரசவம் பார்த்தாலோ சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் கர்ப்பிணி பெண்கள் முறையாக மருத்துவ பரிசோதனைக்கு வருகிறார்களா? என்பதை தீவிரமாக கண்காணிக்க கிராம சுகாதார அலுவலர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரிய உறுப்பினர்களுக்கும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு கூட்டுறவுத்துறை தனிநபர் கடன் வழங்க முகாம் நடத்தப்பட வேண்டும். நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள கட்டுமான பணிகளுக்கு வருவாய்த்துறையினர் விரைந்து நிலம் கையகப்படுத்த வேண்டும். நிலம் வழங்கியவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மாதந்தோறும் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெறும் மாதாந்திர ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அனைத்து அலுவலர்களும் பங்கேற்று துறை ரீதியாக உள்ள பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும். அனைத்து பொது மக்களுக்கும் அரசின் நலத் திட்டங்கள் குறித்த நேரத்தில் நேரடியாக சென்று சேர்வதற்கு அரசின் விதிமுறைக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்புடைய அரசு அலுவர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், திட்ட இயக்குநர் தண்டபாணி, சிவகாசி சார் கலெக்டர் ப்ரியா ரவிச்சந்திரன், துணை இயக்குநர் திருவில்லிபுத்தூர் தேவராஜ்,உதவி கலெக்டர்ஹிமான்சு மங்கள், உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டாஸ்மாக் மதுபான கடைகளை மூட கலெக்டர் ஜெயசீலன் உத்தரவு

விருதுநகர், ஜன. 11-

விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மதுபான உரிம ஸ்தலங்களை தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளின் விதி 12 துணை விதி படி திருவள்ளுவர் தினமான வரும் 15-ம் தேதி அன்றும், குடியரசு தினமான வரும் 26-ம் தேதி அன்றும் தற்காலிகமாக மூடுவதற்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவினை மீறி செயல்படும் டாஸ்மாக் நிறுவனப் பணியாளர்கள் மதுபான கடை உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரம் வரமகாலட்சுமி சில்க்ஸ் திருச்சியில் புதிய கிளை திறப்பு

திருச்சி, ஜன. 11-

காஞ்சிபுரம் வரமகாலட்சுமி சில்க்ஸ், தனது 67 வது, பிரத்தியேக கிளையை திருச்சி, சாஸ்திரி சாலையில் திறந்துள்ளது. இந்த புதிய கிளையை ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ எம்பர் ஜீயர், மடாதிபதி ஸ்ரீ அப்பன் உலகரிய ராமானுஜ எம்பர் ஜீயர் சுவாமிகள் திறந்து வைத்தார். இந்த கடையில் பனாரசி, படோலா, கோட்டா, காஞ்சிபுரம், பைத்தானி, ஆர்கன்சா மற்றும் குப்பதம் போன்ற பல்வேறு வகையான புடவைகள் உள்ளிட்ட பிரீமியம் தயாரிப்புகள் உள்ளன. சாய் சில்க்ஸ் (கலாமந்திர்) லிமிடெட் (சாய் சில்க்ஸ் அல்லது எஸ்எஸ்கேஎல்) என்பது, 2019, 2020 மற்றும் 2021 நிதியாண்டில் (டெக்னோபாக் அறிக்கையின் படி) வருமானம் மற்றும் வரிக்கு பிந்தைய லாபத்தின் அடிப்படையில் தென்னிந்தியாவில் எத்னிக் ஆடைகளின், குறிப்பாக சேலைகளின் முன்னணி சில்லறை விற்பனை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த புதிய எஸ்எஸ்கேஎல் ஃபார்மேட் ஸ்டோர் எங்கள் முழு அளவிலான பிரீமியம் பட்டுப் புடவைகள் மற்றும் காஞ்சிபுரம் புடவைகளை வழங்குகிறது. மூலோபாய ரீதியாக ஒரு பிரதான பகுதியில் அமைந்துள்ள புதிய ஸ்டோர், எங்கள் கிளஸ்டர் அடிப்படையிலான அணுகுமுறையின் ஒரு பகுதியாகும்.

இது குறித்து சாய் சில்க்ஸ் கலாமந்திர் லிமிடெட் நிர்வாக இயக்குநர் பிரசாத் சலாவடி கூறுகையில்,எங்கள் வரமகாலட்சுமி ஸ்டோர்கள் தனித்துவமான அனுபவத்தையும் வாடிக்கையாளர் சேவையையும் வழங்குவதாக நாங்கள் நம்புகிறோம். இது எங்கள் சேலைகள், பல்வேறு இருப்பு வைப்பு யூனிட்டுகளுடன் இணைந்து, வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்தை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது. இங்கிருந்து, தென்னிந்தியா முழுவதும் 25 கூடுதல் ஸ்டோர்களை திறக்க உத்தேசித்துள்ளோம். இவை அடுத்த இரண்டு நிதியாண்டுகளில் திட்டமிடப்பட்டுள்ளன என்று கூறினார். வரமகாலட்சுமி ரீடெய்ல் பிராண்ட் வடிவம் 2011 ஆம் ஆண்டு பெங்களூரு சிக்பெட்டில் முதல் கடை திறப்புடன் தொடங்கப்பட்டது. பின்னர் பெங்களூரு, ஐதராபாத், சென்னை, விஜயவாடா, நெல்லூர் போன்ற நகரங்களில் தொடங்கப்பட்டது.

# செல்போன் டவரில் ஏறி போராட்டம் நடத்திய கூலித் தொழிலாளியை தீயணைப்பு படையினர் மீட்டனர்

திருமங்கலம், ஜன. 11-

கூலி தொழிலாளி செல்போன் டவரில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார். அவரை தீயணைப்பு வீர்கள் மீட்டனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள பொன்னமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் பாண்டி(35). கூலித் தொழிலாளியான இவர் தனது மனைவியுடன் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார். சம்பவத்தன்று இரவு ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக பாண்டி பொன்னமங்கலம் கிராமத்தில் உள்ள செல்போன் டவரில் ஏறி அங்கிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டல் விடுத்தார். இதையடுத்து பாண்டியின் குடும்பத்தினர் மற்றும் கிராம பொதுமக்கள் திரண்டு வந்து அவரை கீழே வரும்படி வலியுறுத்தினர். ஆனால் இறங்கி வரமாட்டேன் செல்போன் டவரிலிருந்து கீழே குதிப்பேன் என பாண்டி மிரட்டல் விடுத்தார். இது பற்றி தகவல் அறிந்த செக்கானூரணி போலீசார் மற்றும் திருமங்கலம் தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தி பாண்டியை டவரிலிருந்து பத்திரமாக கீழே இறக்கி அழைத்து வந்தனர். இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# தொழில் நுட்ப பயிற்சியாளர் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் தகவல்

விருதுநகர் ஜன. 11-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்கள் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சியாளர் மற்றும் பிராட் பேண்ட் டெக்னிஷியன் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. தொழில் நுட்ப பயிற்சியாளர் மற்றும் பிராட் பேண்ட் டெக்னிஷியன் பயிற்சியில் சேர்ந்து பயில பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி, தொழிற்பயிற்சி , பட்டயம் படிப்பு மற்றும் ஏதேனும் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சி முடித்த உடன் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேர்வதற்கு தாட்கோ இணையதளம் www.tahdco.com மூலம் பதிவு செய்யலாம் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் கவுன்சிலர் கூட்டம்

**வத்தலகுண்டு ஜன. 11-**

திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் மாதாந்திர கவுன்சிலர் கூட்டம் நடைபெற்றது,

கூட்டத்திற்கு பேரூராட்சித் தலைவர் எஸ்பி.செல்வராஜ் தலைமை வகித்தார்,செயல் அலுவலர் பூங்கொடிமுருகு முன்னிலை வகித்தார், முதன்மை எழுத்தர் விவேக் வறவேற்றார், கூட்டத்தில் தமிழக அரசு உத்தரவுபடி பேரூராட்சிகுட்பட்ட வார்டுகள் தோறும் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைத்து சுகாதார முன்னெச்சரிக்கைகளை தீவிரப்படுத்தவும்,அனைத்து வார்டுகளிலும் அடிப்படைப் பணிகள் முழுமையாக செய்துதர தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி தலைவர் அறிவித்தார்,

மேலும் இந்த கூட்டத்தில் துணைத் தலைவர் விமல்குமார்,கவுன்சிலர்கள் மீனாட்சி,முத்துலெட்சுமி,கருணாகரன்,மாரியப்பன்,முகமது நசீர்,செல்வி, சத்தியா,கவிதா ராஜாங்கம்,துப்புரவு மேற்பார்வையாளர் அசோக் குமார் உட்பட அலுவலக பணியாளர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் அமையநாயக்கனூர் பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

# கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில் பொது மருத்துவர்களுக்கு புற்றுநோயியல் அறுவைசிகிச்சை குறித்து நவீன பயிற்சி

**நாகர்கோவில், ஜன 11-**

பல்நோக்கு மருத்துவமனைகளில் முன்னணி மருத்துவமனையாக திகழும் கிம்ஸ்ஹெல்த், நாகர்கோவிலில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டது. கிம்ஸ் ஹெல்த் புற்றுநோய் மையம், திருவனந்தபுரம் மற்றும் தமிழ்நாடு அறுவை சிகிச்சை புற்றுநோயியல் நிபுணர்கள் சங்கம் (டிஏஎஸ்ஓ) ஆகியவற்றுடன் இணைந்து கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில் ஏற்பாடு செய்த இந்த தொடர் மருத்துவ கல்வி நிகழ்ச்சி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து 140-க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்களை ஈர்த்தது. டிஏஎஸ்ஓ தலைவர் டாக்டர் சுரேஷ் வெங்கடாசலம், செயலாளர் டாக்டர் அய்யப்பன், திருவனந்தபுரம் கிம்ஸ்ஹெல்த் புற்றுநோய் மையத்தை சேர்ந்த சிஎம்இ அமைப்பு செயலாளர் டாக்டர் ஜெயானந்த் சுனில் உள்பட 9 பேச்சாளர்கள் மற்றும் 14 நிபுணர்கள், மருத்துவம் மற்றும் புற்றுநோயியல் அறுவை சிகிச்சை, புற்றுநோய் நோயியல், கண்டறியும் அணுகுமுறைகள் மற்றும் பலதரப்பட்ட மேலாண்மை உத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அமர்வுகளுக்கு தலைமை தாங்கினர்.

புற்றுநோயியல் அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் லாலா ராபின் மற்றும் நாகர்கோவில் கிம்ஸ்ஹெல்த் மருத்துவ புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் குமணன் ஜே ஆகியோர் புற்றுநோய் சிகிச்சையில் இரட்டை சவால் மற்றும் வாய்ப்புகளை அடிக்கோடிட்டுக் காட்டினார்கள்.டாக்டர் ஜெயானந்த் சுனில் எச்ஐபிஇசி இன் அறிமுகம் மற்றும் சிகிச்சையின் மூலம் கிடைக்கும் நன்மைகள் மற்றும் ஆபத்தில் உள்ள மக்களின் இயல்புகளை அடையாளம் கண்டு புரிந்துகொள்வதை வலியுறுத்தினார். கிம்ஸ்ஹெல்த் மருத்துவ சேவைகள் இயக்குனர் டாக்டர் பி.ராஜன், சிஎஸ்ஆர் மற்றும் இஎஸ்ஜி கிம்ஸ்ஹெல்த் புற்றுநோய் மையத்தின் சி.இ.ஓ. மற்றும் நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் இயக்குனர் ரேஷ்மி ஆயிஷா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் இந்த அமர்வில் கலந்துகொண்டனர்.

# கவனமீர்க்கும் `ஃபாரெவர் நியூ இந்தியா' ஷோரூம் துவக்கம்

**சென்னை, ஜன.11-**

ஃபாரெவர் நியூ இந்தியா, சென்னை மற்றும் தென்னிந்தியாவின் மிகப்பெரிய மாலான எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் அதன் புதிய கடையின் பிரமாண்ட திறப்பு விழாவைக் கொண்டாடியது. புகழ்பெற்ற செல்வாக்கு மிக்க ஃபேஷன் ஸ்டைலிஸ்ட் மெஹந்தி ஜஷ்னானி மற்றும் தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் பிரியதர்ஷினி விஜய் ஆகியோரால் நடத்தப்பட்ட ஒரு கவர்ச்சிகரமான நிகழ்வு, இந்தியாவில் இந்த பிராண்டின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கொண்டாட கூடியிருந்த மதிப்புமிக்க விருந்தினர்களை ஈர்த்தது.

"சென்னையில் உள்ள மிகவும் பிரீமியம் உயர்தர மால்களில் ஒன்றில் எங்கள் ஆடம்பரமான புதிய கடையைத் திறப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். காலத்தால் அழியாத ஃபேஷன் மற்றும் உலகளாவிய வடிவமைப்புகளை எங்கள் ஃபேஷன் உணர்வுள்ள வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதற்கான எங்கள் பயணத்தில் இது ஒரு அற்புதமான மைல்கல்லைக் குறிக்கிறது. சென்னை எப்போதும் நேர்த்தியையும் உன்னதமான பாணிகளையும் பாராட்டும் ஒரு துடிப்பான நகரமாக இருந்து வருகிறது, மேலும் இங்கே எங்கள் இருப்பை விரிவுபடுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

ஃபாரெவர் நியூ இந்தியாவில் தனது தடத்தை விரிவுபடுத்தும் போது, காலத்தால் அழியாத நேர்த்தியையும் சமகால நுட்பத்தையும் வெளிப்படுத்தும் உயர்தர ஃபேஷனை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை பிராண்ட் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இந்த புதிய திறப்பு விழா, வாடிக்கையாளர்கள் அதிகாரம் அளிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் ஃபேஷனை ஆராயக்கூடிய அழைக்கும் இடங்களை உருவாக்கும் ஃபாரெவர் நியூவின் தொலைநோக்குப் பார்வைக்கு ஒரு சான்றாகும்.

# காண்டினென்டல் டயர்ஸ் இந்தியா அறிமுகப்படுத்தும் புதிய டயர்கள்

**சென்னை, ஜன.11-**

பிரீமியம் டயர் தயாரிப்பில் உலகளாவிய முன்னணி நிறுவனமான காண்டினென்டல் டயர்ஸ், சென்னையில் உள்ள வாப்கோ புரூவிங் மைதானத்தில் நடைபெற்ற பிரத்தியேக டிராக் டே நிகழ்வில் பிரீமியம் காண்டாக்ட்6 (பிசி6) டயர்கள் மற்றும் கான்டிசீல்TM தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்வில் காண்டினென்டலின் வணிக வாகன வரிசையிலிருக்கும் Gen3 டிரக் ரேடியல் டயர்களும் காட்சிப்படுத்தப்பட்டன, இது இந்த பிராண்டின் சிறந்த போக்குவரத்துக்கான தீர்வுகளை எடுத்துக் காட்டுகிறது.

வெளியீட்டு விழாவில் பேசிய - பிஏ டயர்ஸ் ஏபிஏசியின் மத்திய மண்டலத் தலைவர் மற்றும் காண்டினென்டல் டயர்ஸின் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் Samir Gupta, "பிரீமியம் காண்டாக்ட் 6 மற்றும் கான்டிசீல்TM ஆகியவற்றின் அறிமுகம் என்பது, எங்கள் 'சந்தைக்குள், சந்தைக்காக' உத்தியின் ஒரு பகுதியாக, இந்திய சாலைகளுக்கு மேம்பட்ட, பொருத்தமான தீர்வுகளைக் கொண்டு வருவதற்கான எங்களின் மற்றொரு படியாகும்.

இந்திய நுகர்வோர் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை சமாளிக்கும் வகையில், பாதுகாப்பு, வசதி மற்றும் செயல்திறனுக்கான எங்கள் அர்ப்பணிப்பை இந்தத் தயாரிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன." என்றார்.

பிரீமியம் காண்டாக்ட் 6: மேம்படுத்தப்பட்ட செயல்திறனுக்கான புதுமையான அம்சங்கள்: இந்திய சாலைகளின் பல்வேறு நிலைகளுக்கு ஏற்றவாறு இவை வடிவமைக்கப்பட்டுள்ளன, PC6 இணையற்ற பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் வசதிக்கான மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# அருப்புக்கோட்டை அருகே ஸ்ரீ ரமணாஸ் மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா



**அருப்புக்கோட்டை, ஜன. 11-**

அருப்புக்கோட்டை அருகே சிதம்பராபுரம் கிராமத்தில் உள்ள ரமணாஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரியில் பொங்கல் விழா உற்சாகமாக கொண்டாடப்பட்டது. இதில் மாணவிகள் பாரம்பரிய முறைப்படி சேலை அணிந்து கல்லூரி வளாகத்தில் கரும்புகளை சுற்றி வைத்து புது பானையில் பொங்கல் வைத்து பொங்கல் பானையை சுற்றி மாணவிகள் கும்மி அடித்தனர். மேலும் பொங்கல் விழாவை உற்சாகமாக கொண்டாடும் விதமாக கல்லூரி மாணவிகள் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் பொங்கல் விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஜாதி மத பேதமின்றி அனைத்து கல்லூரி மாணவிகள் ஒவ்வொரு துறையாக தனித்தனியாக கல்லூரி மாணவிகள் பொங்கல் வைத்து கொண்டாடினர். இந்த பொங்கல் விழா நிகழ்ச்சியில் சேர்மன் ராமச்சந்திரன், கலைக்கல்லூரி செயலாளர் இளங்கோவன், கல்வியியல் கல்லூரி செயலாளர் சங்கரநாராயணன், கல்வியியல் கல்லூரி முதல்வர் ராஜேந்திரன், கலைக்கல்லூரி முதல்வர் தில்லை நடராஜன், இயக்குனர்கள் சுப்பிரமணியன், விக்னேஷ், அருண் மற்றும் சிறப்பு விருந்தினர் மருத்துவர் பரத், கல்லூரி மாணவிகள் பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே விவசாயியை வெட்டிக்கொன்ற இருவர் கைது

**நத்தம், ஜன. 11-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே எல். வலையபட்டியை சேர்ந்தவர் சின்னையா(45). விவசாயி. இவர் கடந்த 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் வீட்டில் கட்டிலில் படுத்திருந்த போது மர்ம நபர்களால் அரிவாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் குறித்து அவரது குடும்பத்தினர் நத்தம் போலீசில் புகார் செய்தனர்.அதன் பேரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் உத்தரவின் பேரில் நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணகுமார், தர்மர் ஆகியோர் தலைமையில் குற்றவாளியை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. தொடர்ந்து கிராமத்தினர் மற்றும் செல்போன் சிக்னல்கள் மூலம் போலீசார் விசாரணை



நடத்தியதில் அதே பகுதியை சேர்ந்த மலைச்சாமி மகன் ரமேஷ் (எ) அழகு, சுப்பையா மகன் தினேஷ் ஆகிய 2 பேர் கொலை செய்தது தெரிய வந்தது. தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில் நீண்ட காலமாக சின்னையாவுடன் ரமேசுக்கும் இடத்தகராறு இருந்ததாகவும், இதனால் அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதனால் எனது சமயம் பார்த்து இருவரும் சேர்ந்து அவரை தீர்த்து கட்டினோம் என்று வாக்குமூலம் அளித்துள்ளனர். கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு பின் குற்றவாளிகளை கைது செய்த நத்தம் போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் பாராட்டினார்.

# நத்தத்தில் பகவதி அம்மன் கோவிலில் விளக்கு பூஜை



**நத்தம், ஜன,11**

நத்தத்தில் உள்ள பகவதி அம்மன் கோவிலில் விளக்கு பூஜை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அசோக்நகரில் உள்ள பகவதியம்மன் கோவிலில் மார்கழி மாத கடைசி வெள்ளிக்கிழமையையை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடந்தது. இதையொட்டி அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பால், பழம், பன்னீர், இளநீர், விபூதி உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து கோவில் வளாகத்தில் உலக நன்மை வேண்டியும், மழை வேண்டியும் திருவிளக்கு பூஜை நடந்தது.இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது.

# ஒட்டன்சத்திரம் பகுதியில் பொங்கல் தொகுப்பு வழங்கல்



**ஒட்டன்சத்திரம், ஜன.11-**

தைப்பொங்கலை முன்னிட்டு தமிழ்நாடுஅரசின் பொங்கல் தொகுப்பினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனை பேரில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய பகுதிகளான அத்திக்கோம்பை, லெக்கையன் கோட்டை,வடகாடு, புலியூர்நத்தம் ஆகியபகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒன்றிய செயலாளர் பாலு வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி சண்முகம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

மாண்புமிகு மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்.
உசிலம்பட்டி.
MCOP.No:33/2024

1.பால்மணி, S/o.மாயாண்டித்தேவர்
2.பவுனம்மாள், W/o.பால்மணி
3.சிவராஜா, S/o.பால்மணி

------ மனுதாரர்கள்

--------எதிரிடை--------


1.ஜெகன்முருகன், S/o.பாஸ்கர் 138/3,9வது தெரு, மீனாம்பிகை நகர், ஜெய்ஹிந்த்புரம், மதுரை தெற்கு, மதுரை மாவட்டம்-625011.
2.ராணி, W/o.ரமேஷ் 4/66,திருவள்ளுவர் தெரு உத்தங்குடி, மதுரை-625107.

-------- 1,2-ம் எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர்கள் இழப்பீடு கோரி மனுதாக்கல் செய்த வழக்கில் 1-ம் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் அழைப்பாணையை பெற்றுக்கொள்ளததால் மனுதாரர்கள் தரப்பில் சமூகம் நீதிமன்றம் விளம்பரம் செய்ய ஒரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவு ஏற்பட்டது.அதன்படி வருகின்ற 29.01.2025-ம் தேதி மேற்படி வழக்கிற்கு வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் 1-ம் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர்கள் காலை 10.30மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தனது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தாங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது.தவறும் பட்சம் மனு ஒருதலைப்பட்சப்படுத்தப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

M.பால்பாண்டி B.A.,B.L.,
வழக்கறிஞர், உசிலம்பட்டி.
மதுரை மாவட்டம்.



திண்டுக்கல் ஒய்.எம்.ஆர்.பட்டி தாதகோனார் சந்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு ஸ்ரீரங்கநாதர் மகாலட்சுமி அலங்காரத்தில் ஸ்ரீபெருமாள் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

# ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் பொங்கல் விழா - கலெக்டர் பங்கேற்பு



**ராமநாதபுரம், ஜன. 11-**

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற பொங்கல்விழாவில் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் கலந்து கொண்டார்.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு வருவாய்த்துறையின் மூலம் பொங்கல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பங்கேற்று அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்தார். இவ்விழாவில் வருவாய்த்துறையின் மூலம் 100-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கு கொண்டு பொங்கல் விழா கொண்டாடினார்கள். அதேபோல் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் நடைபெற்ற பொங்கல் விழாவில் மாவட்ட கலெக்டர் பங்கேற்று அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜலு, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் கல்யாணசுந்தரம், பிரபாகர், மாவட்ட வழங்கல் அலுவலர் இளங்கோவன், வட்டாட்சியர் பழனிக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நத்தம் வேணுகோபாலசாமி கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு

**நத்தம், ஜன, 11-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் -கோவில்பட்டி அக்ரஹாரத்தில் உள்ள வேணுகோபாலசாமி கோவிலில் வைகுண்ட ஏகாதாசியை முன்னிட்டு இன்று காலை சொர்க்கவாசல் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதையொட்டி சுவாமிக்கும், பாமா ருக்குமணி தேவியருக்கும் 16 வகையான அபிஷேகங்களும், அலங்காரம், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து கோவிலில் உள்ள விநாயகர், வாராஹி அம்மன், கருடாழ்வார், ஆஞ்சநேயர் சுவாமிகளுக்கும் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பூஜைகள் நடந்தது. பின்னர் கோவிலை சுற்றி சுவாமி புறப்பாடு நடந்தது. இதில் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு நெய்விளக்கேற்றி சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.





அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட அமுதலிங்கேஸ்வரர் கோவிலில் வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு வரதராஜ பெருமாள் கோவிலில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டு பின்னர் வரதராஜபெருமாள் பக்தர்களுக்கு சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளித்தார்.

## காணவில்லை

**எமது கட்சிக்காரரான, திண்டுக்கல் மாவட்டம், M.M.கோவிலூர் (Po), K.M.நகரில் வசிக்கும் லேட்பழனிச்சாமி மகன் P.கவியரசன் என்பவர் கடந்த 08/01/2025ம் தேதி காலை 10 மணியளவில் தனது தகப்பனார் பழனிச்சாமியின் பெயரிலுள்ள M.M.கோவிலூர் கிராமம். பட்டா எண்.841, ச.எண்.282/58 மற்றும் 282/60-க்கு கட்டுப்பட்டதும், திண்டுக்கல் ஜாயிண்ட் 1 சார்பதிவாளர் அலுவலகத்தில் 28/01/2010ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.290/2010 மற்றும் ஆவண எண்.291/2010 ஆகிய இரண்டு அசல் கிரைய பத்திரங்களை ஜெராக்ஸ் எடுப்பதற்காக தனது வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு தனதுடுவீலரில்திண்டுக்கல்நோக்கிசென்றுகொண்டிருந்தபோது செல்லும் வழியில் திண்டுக்கல், N.G.O.காலனி ரோட்டில் பஸ் ஸ்டாப் அருகே தவறிவிழுந்து காணாமல் போய்விட்டது. மேற்படி அசல் கிரைய பத்திரங்கள் யாருகேனும் கிடைக்கப்பெற்றால்எம்மிடமோ அல்லது எமது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்குமாறு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.**

V.Lakshmanan B.A., B.L., Advocate,
Dindigul. Cell: 9944944524

மாண்புமிகு மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை.
I.A.No: 2 / 2024 in
I.P.No: 92 / 2016

M/s.ஸ்வர்ணா ஜீவல்ஸ் மற்றும் வசந்த் துலாபாரம் கோல்டு டெஸ்டிங் அதன் உரிமையாளர்களான
**1.L.P.குருராஜப்பா,**
த/பெ.பழனிச்சாமி, க.எண்.40, தென்னோலைக்கார சந்து, தெற்கு கிருஷ்ணன் கோவில் சந்து, மதுரை-1.
**2.L.Pசுவாமிநாதன்,**
த/பெ.பழனிச்சாமி, எண்.154, தெற்கு பெருமாள் மேஸ்திரி வீதி, மதுரை-1.

--- மனுதாரர்கள்/கடனாளிகள்

--- எதிரிடை ---

**1.கணேசன்** (கணேசன் பைனான்ஸ்), அருணா மெடிக்கல் ஷாப் அருகில், தெற்கு மாசி வீதி, மதுரை-1.
**2.முருகன்** (முருகன் பைனான்ஸ்), அருணா மெடிக்கல் ஷட்ப் அருகில், தெற்கு மாசி வீதி, மதுரை-1.
**3.Rஹரிஹரன்,**
S/o.ராமகிருஷ்ணன், க.எண்.10, பச்சரிசிக்கார 1-வது சந்து, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
**4.H.சோபனா,**
W/o. ஹரிஹரன், -do-.
**5.சண்முகம் நாடார்,**
சண்முக நாடார் பைனான்ஸ், எண்.10, எண்.10, பச்சரிசிக்கார 1-வது சந்து, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
**6.ராஜீ,**
R.J.பைனான்ஸ்/ பாலாஜி பைனான்ஸ், A.G.சர்ச் அருகில், வில்லாபுரம் ஹவுசிங் போர்டு காலனி, மதுரை-12.
**7.S.வெங்கடேசன்,**
மீன்கடை சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை-1.
**8.சிதம்பரம்,**
வினாயகா மத்தியஸ்த கடை, மேலசெட்டி சந்து, தெற்காவணி மூலவீதி, மதுரை-1.
**9.விஜய் செட்டியார்,**
ரோஜா ஜீவல்லர்ஸ், தெற்காவணி மூலவீதி, மதுரை-1.

--- 2,3,9,10,11,12,13,14,15-ம் எதிர்மனுதாரர்கள்/கடன் கொடுத்தவர்கள்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர்கள்/ கடனாளிகள் தாக்கல் செய்துள்ள தள்ளுபடி உத்தரவை ரத்து செய்யக்கோரிய மனுவில் மேற்படி 2,3,9,10,11,12,13,14,15-ம் எதிர்மனுதாரர்கள்/ கடன் கொடுத்தவர்கள் ஆகிய தாங்கள் ஆஜராக 30.01.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்;மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

S.D.கிருஷ்ணகுமார்
R.பிரகாஷ்,
வழக்கறிஞர்கள்,மதுரை.

thinaboomi.com
தினபூமி, மதுரை
ஜனவரி 11 2025

### சாம்பியன்ஸ் டிராபி தொடர்:
# இந்திய அணியின் ஆலோசகராக மகேந்திர சிங் டோனி நியமனம்?




**மும்பை, ஜன.11-**
சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியின் ஆலோசகராக முன்னாள் வீரர் தோனி நியமிக்கபட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.
9-வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (பிப்ரவரி) 19-ந் தேதி முதல் மார்ச் 9-ந்தேதி வரை பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்கிறது. பாதுகாப்பு அச்சுறுத்தலால் இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் துபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த தொடருக்கான அணிகளை வருகிற 12-ந் தேதிக்குள் அறிவிக்க வேண்டும் என ஐ.சி.சி. கெடு விதித்துள்ளது. இந்த வீரர்கள் தேர்வில் மாற்றம் செய்ய பிப்ரவரி 12-வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணியின் ஆலோசகராக முன்னாள் வீரர் தோனி நியமிக்கபட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து பல்வேறு கருத்துக்கள் சமூக வலைதளங்கில் வெளியாகி வருகிறது.

# இங்கி., கவுண்டி போட்டிகளில் விளையாடுகிறார் விராட் கோலி?




**புதுடெல்லி, ஜன.11-**
இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி கிரிக்கெட் போட்டிகளில் விராட் கோலி விளையாட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

**சுற்றுப்பயணம்...**
இந்திய அணியின் முன்னணி வீரர் விராட் கோலி. இவர் சமீபத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மிக மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தினார். இதன் காரணமாக பல்வேறு விமர்சனங்களை சந்தித்து வருகிறார். இந்திய அணி அடுத்ததாக வரும் ஜூன் மாதம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. இதையடுத்து இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு முன்னதாக அங்குள்ள சூழ்நிலைகளுக்கு தயாராகும் பொருட்டு விராட் கோலி அங்கு நடைபெறும் கவுண்டி கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

**நியமிக்கப்படலாம்...**
இருப்பினும், இந்தியாவில் ஐ.பி.எல் போட்டிகள் நடைபெறும் போது அங்கு கவுண்டி போட்டிகள் நடைபெறுவதால் விராட் கோலி கவுண்டி கிரிகெட்டில் விளையாடுவாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. எதிர்வரும் ஐ.பி.எல் தொடரில் பெங்களூரு அணியின் கேப்டனாக விராட் கோலி நியமிக்கப்படலாம் என கூறப்படுகிறது. ஒருவேளை பெங்களூரு அணி, ஐ.பி.எல் தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறினால் விராட் கோலி கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட சுமார் 20 நாட்கள் மட்டுமே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### இங்கிலாந்து எதிரான தொடர்:
# கே.எல்.ராகுலுக்கு ஓய்வு?



**புதுடெல்லி, ஜன.11-**
இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் கே.எல். ராகுலுக்கு ஓய்வு அளிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**வரும் 22-ம் தேதி...**
பட்லர் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 22ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடரில் முதலில் டி20 போட்டிகளும், அதனை தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடைபெற உள்ளன. டி20 போட்டிகள் முறையே கொல்கத்தா, சென்னை, ராஜ்கோட், புனே, மும்பையிலும், ஒருநாள் போட்டிகள் நாக்பூர், கட்டாக், அகமதாபாத் உள்ளிட்ட நகரங்களில் நடக்கின்றன. இங்கிலாந்துக்கு எதிரான தொடர் மற்றும் சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணிகள் வரும் 12ம் தேதி அறிவிக்கப்படும் என கூறப்படுகிறது.

**சஞ்சு சாம்சனுக்கு...**
இந்நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முன்னணி பேட்ஸ்மேனான கே.எல்.ராகுலுக்கு ஓய்வு அளிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதேசமயம் சாம்பியன்ஸ் டிராபி தொடரில் முதன்மை விக்கெட் கீப்பராக ராகுல் தேர்வு செய்யப்படுவார் எனவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இந்திய அணியில் சஞ்சு சாம்சன் மற்றும் ரிஷப் பண்ட் ஆகியோருக்கு வாய்ப்பளிக்கப்பட்டு, அதில் சிறப்பாக செயல்படுபவரை சாம்பியன்ஸ் கோப்பை தொடருக்கான கூடுதல் விக்கெட் கீப்பராக இந்திய அணி தேர்வு செய்யும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# ரிஷப் பண்டுக்கு அஸ்வின் பாராட்டு

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடரில் விளையாடியது. இதில் 3-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று 10 வருடங்களுக்கு பின் பார்டர் - கவாஸ்கர் கோப்பையை கைப்பற்றி அசத்தியது. அதன்படி நடைபெற்ற இந்த தொடரில் இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ரிஷப் பண்ட் தடுப்பாட்டத்தில் கவனத்தை செலுத்தாமல் அதிரடியாக விளையாட முயற்சித்து முக்கியமான தருணங்களில் விக்கெட்டை தாரை வார்த்தார். இந்நிலையில் ரிஷப் பண்டிடம் உலகிலேயே மிகச்சிறந்த தடுப்பாட்டம் இருப்பதாக இந்திய முன்னாள் வீரர் அஸ்வின் பாராட்டியுள்ளார். இது குறித்து அஸ்வின் பேசியது பின்வருமாறு:- "ரிஷப் பண்ட் தடுப்பாட்டம் விளையாட மிகவும் அரிதாகவே விக்கெட்டை இழப்பார். ஏனெனில் இந்த உலகிலேயே அவரிடம் சிறந்த தடுப்பாட்டம் இருக்கிறது. இப்போதெல்லாம் தடுப்பாட்டம் என்பது மிகவும் சவாலான ஒன்றாக மாறியுள்ளது. அவருக்கு எதிராக வலைப் பயிற்சியில் நான் நிறைய பவுலிங் செய்துள்ளேன். அப்போது போல்ட், எட்ஜ், எல்.பி.டபிள்யூ., முறைகளில் அவர் அவுட் ஆனதில்லை. அந்த வகையில் தனது கைகளில் அவர் சிறந்த தடுப்பாட்டத்தை வைத்துள்ளார்." என்று கூறினார்.

### காஞ்சிபுரம் அஷ்டபுஜ பெருமாள் கோவிலில்
# சொர்க்கவாசல் திறப்பின் போது வைணவர்கள் இடையே மோதல்

**காஞ்சிபுரம், ஜன. 11-**
சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சியின் போது வைணவர்களிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது.
108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்கும் காஞ்சிபுரம் அஷ்டபுஜ பெருமாள் கோவிலில் வைணவர்களான வடகலை மற்றும் தென்கலை ஆகிய இரு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடையே வேதபாராயணம் மற்றும் ஸ்தோத்திர பாடல்கள் பாடுவதில் நீண்ட காலமாக பிரச்சினை நிலவி வருகிறது. இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு விசாரணையும் நடைபெற்று வருகிறது.
இந்நிலையில், அஷ்டபுஜ பெருமாள் கோவிலில் நேற்று வைகுண்ட ஏகாதசி நிகழ்வு நடைபெற்றது. இதற்காக சொர்க்கவாசல் திறப்பு உற்சவம் நடைபெற்றது. காலை நேரத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பிரபந்தம் பாடுவதில் தென்கலை மற்றும் வடகலை பிரிவினர்களிடையே மோதல் ஏற்பட்டது. தென்கலை பிரிவினரே கோவிலில் திவ்ய பிரபந்தம் பாடுவதற்கு முன்னுரிமை பெற்றிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.
இந்நிலையில் திடீரென அங்கு வந்த வடகலை பிரிவினர் நாங்களும் பாடுவோம் என வாக்குவாதம் செய்தனர். இதனையடுத்து அங்கு வந்த காவல்துறை மற்றும் கோவில் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி இரு தரப்பையும் பாட அனுமதித்தனர். அதற்கு பின்னரும் பிரச்சினை செய்தவர்களை கோவிலில் இருந்து காவல்துறையினர் வெளியேற்றினர்.

### சுய உதவிக்குழுக்களின் திறன் மேம்பாட்டிற்கு
# மின்மதி 2.0 செயலியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, ஜன. 11-**
சுய உதவிக் குழுக்களின் நிர்வாகத்திறனையும், நிதி மேலாண்மை திறனையும் மேம்படுத்துவதற்காக மின்கற்றல் தள அடிப்படையில் ''மின்மதி 2.0'' கைபேசி செயலியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது;- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை உள்ளிட்டவற்றில் சிறப்பாக செயல்பட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், உருவாக்கப்பட்டுள்ள "மின்மதி 2.0" கைபேசி செயலியை தொடங்கி வைத்து, புதிய வடிவமைப்பு மற்றும் மக்களை கவரும் உள்ளடக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் இதழினை வெளியிட்டார்.
பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காக 1989-ல் முத்தமிழறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுவினர் தமிழ்நாடு முதல்-அமைச்சரின் சீரிய தலைமையிலான திராவிட மாடல் அரசினால் ஏற்றம் பெற்று மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான அடிப்படைப் பயிற்சிகள் நேரடியாக சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.
சுய உதவிக் குழுக்களின் நிர்வாகத்திறனையும், நிதி மேலாண்மை திறனையும் மேம்படுத்துவதற்காக மின்கற்றல் தள அடிப்படையில் ''மின்மதி 2.0'' கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலி மூலமாக நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், அரசுத் திட்டங்கள் போன்ற தலைப்புகளில் உரிய பயிற்சிகளை கேட்பொலி மற்றும் காணொளி வழியாக வழங்கப்பட உள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாக தங்களுடைய கைபேசி மூலம் பல்வேறு தலைப்புகளில் தேவையான தகவல்களைக் காணவும், கற்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சமுதாய வளப் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்த செயலி மூலம் பயிற்சி வழங்கப்பட உள்ளதுடன், தேர்வானவர்களுக்கு மின் சான்றிதழ் (E-Certificate) வழங்கும் வகையில் "மின்மதி 2.0'' கைபேசி செயலி அமைக்கப்பட்டுள்ளது.''
மின்மதி 2.0'' கைபேசி செயலியானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் தனித்தனியாக செயல்படுத்தப்பட்டு வந்த மென்பொருட்கள் மற்றும் செயலிகள் அனைத்தும் இணைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த மின்னணு தளமாக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியர் காலிப்பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை
### அமைச்சர் அன்பில் மகேஷ் உறுதி

**சென்னை, ஜன.11-**
10 ஆயிரம் ஆசிரியர் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
தமிழக சட்டசபையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது நேற்று விவாதம் நடைபெற்றது. அப்போது அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியதாவது:- 10 ஆயிரம் ஆசிரியர் காலிப்பணியிடத்தை நிரப்புவது பற்றி பேசப்பட்டுள்ளது. டி.ஆர்.பி. மூலமாக 6 ஆயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான தேர்வு முடிந்து, நியமன தேதியை முடிவு செய்து, பணி உத்தரவை வழங்கும் நிலையில், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் வழக்கு தொடர்ந்து விட்டனர். வருகிற 21-ந் தேதி வழக்கு விசாரணைக்கு வருகிறது. நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் படிப்படியாக பணி நியமனம் செய்யப்படும். தற்காலிக ஆசிரியர் மூலமாக பாடங்களை நடத்துகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

### அண்ணா பல்கலைக்கழக விவகாரம்:
# ஐகோர்ட் உத்தரவை ரத்து செய்யக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு அப்பீல்

**சென்னை, ஜன. 11-**
அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் ஐகோர்ட் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது.
சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிசம்பர் 21-ந்தேதி என்ஜினீயரிங் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது. மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த கோட்டூர்புரத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.
இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவியின் பெயர், சொந்த ஊர் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்கள் அடங்கிய முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) சமூக வலைதளத்தில் வெளியானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட மாணவியின் விவரங்கள் அடங்கிய முதல் தகவல் அறிக்கை வெளியானது தொடர்பாக சென்னை ஐகோர்ட் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், வி.லட்சுமிநாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 25 லட்சம் இழப்பீடு வழங்க ஐகோர்ட் உத்தரவிட்டது. மேலும் இந்த வழக்கு தொடர்பாக ஐகோர்ட் நீதிபதிகள் கூறுகையில், ''பாதிக்கப்பட்ட மாணவியின் கண்ணியம் காக்கப்படவில்லை. மாணவியின் அடையாளத்தை எப்.ஐ.ஆரில் குறிப்பிட்டது சட்டப்படி தவறு. செய்தியாளர் சந்திப்பு நடத்த அரசிடம் சென்னை காவல் ஆணையர் அனுமதி பெறவில்லை. சென்னை காவல் ஆணையர் அருண் மீது அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று தெரிவித்தனர். தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு உரிய பாதுகாப்பு வழங்க டி.ஜி.பி.க்கு உத்தரவிட்ட நீதிபதிகள், அண்ணா பல்கலைக் கழக பாதுகாப்பை மேம்படுத்தவும் அறிவுறுத்தினர்.
இந்த நிலையில், சென்னை காவல் ஆணையர் மீது நடவடிக்கை எடுக்க ஐகோர்ட் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# செல்லப்பிராணியுடன் எம்.எஸ்.டோனி

ஓய்வுக்கு பின்னர் தனது குடும்பத்துடனும் செல்லப்பிராணியுடனும் தோனி நேரத்தை செலவிட்டு வருகிறார். கிரிக்கெட் ஜாம்பவானும் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி கேப்டனுமான தோனி, கிரிக்கெட் ஆடுகளத்தில் தனது விளையாட்டு நுணுக்கங்களுக்காவும், கணநேரத்தில் முடிவு எடுக்கும் திறனுக்காகவும் பெரிதும் போற்றப்படுபவர். கடந்த 2020-ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றநிலையில் சி.எஸ்.கே அணிக்காக ஐ.பி.எல்-லில் மட்டும் விளையாடி வருகிறார்.
ஓய்வுக்கு பின்னர் தனது குடும்பத்துடன் அதிக நேரம் செலவிட்டு வருகிறார். குறிப்பாக தனது மகள் ஜிவாவுடன் பொழுதுபோக்குவதை வாடிக்கையாக கொண்டுள்ள தோனி, மகளுடன் இணைந்து செல்லப்பிராணி பராமரிப்பில் ஈடுபட்டார். தனது வீட்டில் வளர்க்கப்பட்டு வரும் செல்லப்பிராணி நாய்க்கு, தோனி 'சீப்பு'வை கொண்டு வாரி விட்டார். அருகில் உட்கார்ந்திருந்த ஜிவா, தந்தையின் நடவடிக்கையை பார்த்து சிரித்தப்படி நாயுடன் விளையாடும் வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

### நானும் மனிதன்தான், தவறு செய்திருக்கலாம்:
# முதல்முறையாக நேர்காணலில் மனம் திறந்தார் பிரதமர் மோடி

**புது டெல்லி, ஜன. 11-**
இணையதள சேனல் ஒன்றுக்காக, முதல் முறையாக, நேர்காணல் ஒன்றில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி மனம் திறந்து பேசியிருக்கிறார்.
சில்லறை பங்கு தரகில் ஈடுபடும் ஜெரோதாவின் இணை நிறுவனரும் தொழிலதிபருமான நிகில் காமத் எழுப்பிய கேள்விகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி சுவாரஸ்யமான பதில்களை அளித்துள்ளார். இந்த நேர்காணலின் டிரெய்லர் தற்போது வெளியாகியிருக்கிறது. இதனை பிரதமர் மோடி பகிர்ந்திருக்கிறார்.
பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்க்கை, இளமைக் காலம், கல்வி, அரசியல் போட்டி, மன அழுத்தத்தை எதிர்கொண்ட விதம், தோல்விகள், சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொண்டது என பல விஷயங்களையும் இந்த இரண்டு மணி நேர நேர்காணலில் அவர் பகிர்ந்துகொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. நிகில் காமத்துடன் பல்வேறு விஷயங்களைப் பேசிய நேர்காணலை மிக மகிழ்ச்சியுடன் உருவாக்கியுள்ளோம். நிச்சயம் பார்த்து மகிழத்தக்கதாக இருக்கும் என்று கூறி, விடியோவையும் பிரதமர் மோடி தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் இணைத்துள்ளார்.
பீப்பிள் பை டபிள்யுடிஎஃப் என்ற பெயரில் நிகில் காமத் ஒரு பாட்காஸ்ட் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். இதில் பல்வேறு பிரபலங்களை அழைத்து வந்து நேர்காணல் நடத்தி அதனை வெளியிடுவார். அந்த வகையில் பிரதமர் நரேந்திர மோடி இதில் பங்கேற்றுள்ளார். இந்த நேர்காணலின் டிரெய்லரை நிகில் காமத் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் வெளியிட அதனை தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் ரீடிவீட் செய்திருக்கிறார் பிரதமர் மோடி. இந்த டிரெய்லரில், பிரதமர் மோடி தவறுகள் தவிர்க்க முடியாதது, நானும் கூட நிறைய தவறுகள் செய்திருக்கலாம், நானும் ஒருமனிதன்தான், கடவுள் அல்ல என்று கூறுவது இடம்பெற்றுள்ளது.
தனக்கு பதற்றமாக இருப்பதாக நிகில் காமத் கூறுவதும், அதனைக் கேட்ட பிரதமர் மோடி சிரித்தபடி, இது என்னுடைய முதல் பாட்காஸ்ட். உங்கள் பார்வையாளர்களிடம் இது எப்படி சென்றடையப் போகிறது என்று எனக்குத் தெரியவில்லை என்று கூறியிருப்பதும் வெளியிடப்பட்டுள்ளது.

# அவதூறு வழக்கில் ராகுலுக்கு ஜாமீன்

**புணே, ஜன. 11-**
சாவர்க்கர் குறித்து அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு புணே நீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது.
சாவர்க்கர் குறித்து அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு புணே நீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது. முன்னதாக இந்த வழக்கு புணே சிறப்பு நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தபோது ராகுல் காந்தி காணொளி மூலம் ஆஜரானார். அப்போது அவருக்கு ரூ.25,000 உத்தரவாதப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து ராகுலுக்கு நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவு பிறப்பித்தது.
இதுகுறித்து ராகுல் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மிலிந்த் பவார், ராகுல் காந்தி நேரில் ஆஜராவதில் இருந்து நீதிமன்றம் நிரந்தர விலக்கு அளித்துள்ளது என்று கூறினார். அதேசமயம் இந்த வழக்கு பிப்ரவரி 18 ஆம் தேதி மீண்டும் விசாரிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். கடந்த 2023ல் லண்டனில் பேசிய ராகுல் காந்தி சாவர்க்கர் குறித்து அவதூறாக பேசியதாக சாவர்க்கரின் பேரன் சத்யாகி சாவர்க்கர் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது புணே நீதிமன்றத்தில் கிரிமினல் அவதூறு வழக்கு தொடர்ந்திருந்தார். பின்னர் இந்த வழக்கு எம்.பி., மற்றும் எம்எல்ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறுமி உயிரிழந்த விவகாரம்:
# தாளாளர் உள்பட 3 பேருக்கு ஐகோர்ட் நிபந்தனை ஜாமீன்
### சிறுமியின் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் வழங்கவும் உத்தரவு

**சென்னை, ஜன. 11-**
விக்கிரவாண்டியைச் சேர்ந்த பழனிவேல் மகள் லியாலட்சுமி (4). இவர், அங்குள்ள தனியார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் எல்.கே.ஜி.படித்து வந்தார். கடந்த 3-ஆம் தேதி மதியம் உணவு இடைவேளையின் போது சக மாணவ, மாணவிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த லியாலட்சுமி, பள்ளியின் கழிவுநீர்த் தொட்டியில் தவறி விழுந்து உயிரிழந்தார்.
இதுகுறித்து விக்கிரவாண்டி போலீஸார் வழக்குப் பதிந்து பள்ளித் தாளாளர் எமல்டா, முதல்வர் டோமினிக் மேரி, ஆசிரியை ஏஞ்சல் ஆகிய மூவரையும் கைது செய்தனர். உடல்நலக் குறைவால் தாளாளர், முதல்வர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், ஆசிரியை மட்டும் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் தனியார் பள்ளியின் கழிவுநீர்த் தொட்டியில் விழுந்து சிறுமி உயிரிழந்த வழக்கில், பள்ளித் தாளாளர் உள்ளிட்ட மூவரின் ஜாமீன் மனுக்களை விழுப்புரம் மாவட்ட நீதிமன்ற முதன்மை அமர்வு கடந்த புதன்கிழமை தள்ளுபடி செய்து உத்தரவிட்ட நிலையில், சென்னை உயர் நீதிமன்றம் நேற்று நிபந்தனை ஜாமீன் வழங்கியிருக்கிறது. வழக்கின் விசாரணை நடைபெற்று வருவதால் ஜாமீன் வழங்கக்கூடாது என்று காவல்துறை தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் மூவரும் சென்னையில் ஒரு வாரம் தங்கி இருந்து மயிலாப்பூர் காவல் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கி நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா உத்தரவிட்டுள்ளார். மேலும் பலியான சிறுமி லியா லட்சுமியின் குடும்பத்துக்கு பள்ளியின் தாளாளர், முதல்வர் ஆகியோர் ரூ.5 லட்சம் வழங்கவும் அவர் உத்தரவிட்டார்.

# டெல்லி: வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மாணவன் கைது

**புதுடெல்லி, ஜன. 11-**
டெல்லியில் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக பள்ளி மாணவர் கைது செய்யப்பட்டார்.
கடந்த சில மாதங்களாக டெல்லியில் உள்ள பல்வேறு பள்ளிகளுக்கு இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல்கள் வந்தன. உடனடியாக வெடிகுண்டு நிபுணர்கள், சம்பந்தப்பட்ட பள்ளிகளில் சோதனை நடத்தி, வெடிகுண்டு மிரட்டல் புரளி எனக் கண்டறிந்தனர். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதற்கிடையே நேற்றுமுன்தினம் டெல்லியில் உள்ள 10 பள்ளிகளுக்கு இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.
அதில், பள்ளி வளாகங்களில் பல்வேறு இடங்களில் பயங்கரமான வெடிகுண்டு இருப்பதாகவும், தேர்வு நேரம் என்பதால் மாணவர்கள் அனைவரும் வகுப்பறைக்குள் இருப்பர்; மற்ற ஆசிரியர்களும் அதிகாரிகளும் பள்ளியைச் சுற்றி வருவர் என்பதாலும் இழப்பு அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையே, பள்ளிகளில் தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டு, மின்னஞ்சலில் பெறப்பட்ட அச்சுறுத்தல் புரளி எனத் தெரியவந்தது. போலீசார் நடத்திய விசாரணையில் அனுப்பியவருக்கு பள்ளிகளில் தேர்வு அட்டவணை குறித்தும், ஏனைய நடவடிக்கைகள் குறித்தும் தெரிந்திருக்கிறது என்பது கண்டறியப்பட்டது. மேலும், இ-மெயில் குறித்து விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.
இந்த நிலையில், பள்ளிகளுக்கு இ-மெயில் மூலம் வெடிகுண்டு அச்சுறுத்தல் அனுப்பியது 12-ம் வகுப்பு மாணவர் என்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து, வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மாணவனை கைது செய்த போலீசார், அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கடும் பனிமூட்டத்தால்
# தலைநகர் டெல்லியில் விமானங்கள் தாமதம்

**புதுடெல்லி, ஜன. 11-**
டெல்லியில் கடும் பனிமூட்டம் காரணமாக விமானங்கள் தாமதமாக வந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
தலைநகர் டெல்லியில் கடந்த சில நாட்களாக கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. பனிமூட்டம் காரணமாக டெல்லியில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. கடும் பனிமூட்டம், போதிய வெளிச்சமின்மை காரணமாக டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை 100-க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக வந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால், பயணிகள் பெரும் அவதியடைந்தனர்.
டெல்லி சர்வதேச விமான நிலையம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், புதுப்பிக்கப்பட்ட விமான தகவல்களுக்கு சம்பந்தப்பட்ட விமான நிறுவனத்தை தொடர்பு கொள்ளுமாறு பயணிகள் கேட்டு கொள்ளப்படுகிறார்கள். ஏதேனும் அசவுகரியம் ஏற்பட்டால் அதற்காக வருந்துகிறோம் என்று தெரிவித்துள்ளது. டெல்லியில் பனிமூட்டம் தொடர்ந்து அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசு
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
விழுப்புரம் மாவட்டம்
**ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**
**உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2024-25 திட்டத்தின்கீழ் தடுப்பு சுவர் அமைத்தல்**
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் கூடுதல் ஆட்சியரால் விழுப்புரம் மாவட்டத்தில் **உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2024-25 திட்டத்தின்கீழ் தடுப்பு சுவர்கள்** அமைத்திட மின்-ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான மின்-ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 13.01.2025 முதல் 27.01.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. **முக்கியமான நாள் மற்றும் நேரம்**
(i) மின்-ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **27.01.2025 பிற்பகல் 3.00 மணி**
(ii) மின்-ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **27.01.2025 பிற்பகல் 4.00 மணி.**
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம்.
செ.ம.தொ.இ./ 139 /ஒப்பந்தப்புள்ளி/2025

# மாணவ-மாணவிகளின் அறிவியல் கண்டுபிடிப்பு கண்காட்சியினை கலெக்டர் தொடங்கி வைத்தார்



**விருதுநகர் ஜன.11-**

விருதுநகர் நோபல் மெட்ரிக் பள்ளியில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் உட்பட 37 பள்ளிகளில் உள்ள அடல் பழுதாக்க ஆய்வகத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களின் புதுமை மற்றும் தொழில்நுட்பம் தலைப்பில் நடைபெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளின் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் குத்துக்கேற்றி துவக்கி வைத்தார்.

இந்த கண்காட்சியில் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு 35 புதிய புதுமை மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர். இந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் பல அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் இருந்தது.

பின்னர், தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் சிறந்த அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், முதுநிலை மேலாளர் .ரவீந்திர வாதர்கர், நிறுவன இயக்குநர் சுபத்ரா, பள்ளி முதல்வர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சிக்குட்பட்ட மில்கேட் பகுதியில் உள்ள நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசு தொகுப்பினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழிகாட்டுதலின் படி, மேலூர் நகர் மன்ற தலைவர் யூ.முகமது யாசின் தலைமையில், 26வது வார்டு கவுன்சிலர் கலைச்செல்வி செந்தில் குமார் மற்றும் 27-வது வார்டு கவுன்சிலர் வசந்தா ராஜா ஆகியோர் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பினை வழங்கியபோது எடுத்த படம்.**

# கள்ளழகர் கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு: பக்தர்கள் தரிசனம்



**மேலூர், ஜன. 11-**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோவில் கள்ளழகர் கோவிலில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி விழாவை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு திருவிழா நடைபெறுவது வழக்கம். அதன்படி கடந்த சில தினங்களாக முதல் பகல் பத்து உற்சவ திருவிழா தொடங்கியது. தொடர்ந்து தினமும் கோவில் உள்பிரகாரத்தில் சுவாமி புறப்பாடு நடந்தது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக சொர்க்க வாசல் திறப்பு விழா நேற்று அதிகாலை நடந்தது. இதில் மேளதாளம் முழங்க வர்ணக்குடை, தீவட்டி பரிவாரங்களுடன் காலை 5.35 மணிக்கு கள்ளழகர் என்கிற சுந்தரராச பெருமாள் செர்க்கவாசல் வழியாக வந்து அங்குள்ள சயன மண்டத்தை சுற்றி வந்து அதே மண்டபத்தில் எழுந்தருளினார்.

முன்னதாக நம்மாழ்வார் பரமபத வாசல் வழியாக பெருமாளை வரவேற்கும் நிகழ்வு நடந்தது. தொடர்ந்து சுவாமிக்கு விசேஷ பூஜைகள், சிறப்பு அபிஷேகம் நடந்தது. சர்வ அலங்காரத்தில் சுந்தரராச பெருமாள் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். வைகுண்ட ஏகாதசியையொட்டி நடந்த இந்த விழாவில் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் சுற்று வட்டாரத்தில் இருந்து திரளான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் வெங்கடாசலம், இணை ஆணையர் செல்லதுரை, மற்றும் அறங்காவல் குழுவினர்கள், கண்காணிப்பாளர்கள், உள்துறை அலுவலர்கள், கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர். அப்பன் திருப்பதி போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## ஏகாதசி திருநாளை முன்னிட்டு
# வத்திராயிருப்பு சேதுநாராயணப்பெருமாள் கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு

**விருதுநகர், ஜன. 11-**

வத்திராயிருப்பு சேதுநாராயணப் பெருமாள் கோயிலில் நடந்த வைகுண்ட ஏகாதசி திருநாளை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு வெகு விமர்சையாக நடந்தது.



சிறப்பு அலங்காரத்திற்கு பின் உற்சவர் பூதேவி, ஸ்ரீதேவி தாயார்களுடன் சப்பரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். பக்தர்களின் திவ்ய பிரபந்த பாராயண வழிபாடு மற்றும் திருப்பாவை பஜனை நடந்தது. அதன் பின்னர் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு சொர்க்கவாசலுக்கு அலங்காரம் செய்யப்பட்டு பரமபத வழிபாடு நடத்தப்பட்டது. கோயில் செயல் அலுவலர் ஜோதிலட்சுமி சொர்க்க வாசல் கதவை திறந்து வைக்க, அதன் வழியே பெருமாள் சர்வ அலங்காரத்தில் வெளியே வந்தார்.

வாசலுக்கு முன் பெருமாளுக்கும் ஆழ்வார்களுக்கும் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. பின்னர் மேளதாளங்கள் முழங்க பெருமாள் வீதி உலா சென்று பக்தர்களுக்கு காட்சியளித்தார். அதன் பின்னர் கோயில் மைய மண்டபத்தில் நடந்த சிறப்பு பூஜை வழிபாட்டிற்கு பின் பக்தர்கள் சொர்க்கவாசல் வழியே சென்று தரிசனம் செய்தனர். வத்திராயிருப்பு, கூமாபட்டி, சேது நாராயணபுரம் உட்பட பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர். பக்தர்கள், கோயில் செயல் அலுவலர் ஜோதிலட்சுமி இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

## வத்தலக்குண்டு அருகே
# அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு பிரியாணி விருந்து



**வத்தலகுண்டு, ஜன. 11-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகில் உள்ள விராலிப்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்தநாள் விழாவையொட்டி விராலிப்பட்டி கிஷோர் ப்ளூ மெட்டல்ஸ் மற்றும் விராலிப்பட்டி தி.மு.க. சார்பாக ஆயிரம் பேருக்கு பிரியாணி விருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு வத்தலகுண்டு தி.மு.க. தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி. முருகன் தலைமை வகித்து பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். விராலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சுபாஷினி சுதாகர், வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் விஜயகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வத்தலக்குண்டு பேரூர் ஆட்சி தலைவர் சிதம்பரம், ஒன்றிய பொறுப்பாளர் விருவீடு செல்வராஜ், கார்த்திக், விராலிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜன், தி.மு.க. நிர்வாகிகள் மாணிக்கம், நரசிம்மன், சந்திரசேகர், ராமமூர்த்தி, வக்கீல் வெங்கடேஷ், ராஜாராம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் முடிவதற்குள்
# கப்பலூர்- செக்கானூரணி ரெயில் நிலையங்களை மீண்டும் அமைக்க தென் தமிழக மக்கள் கோரிக்கை

**திருமங்கலம், ஜன. 11-**

மதுரை தோப்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமான பணிகள் விரைவில் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கு மிகவும் அருகிலுள்ள கப்பலூர், செக்கானூரணி ரெயில் நிலையங்களை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட வேண்டும் என தென் தமிழக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தென்னிந்தியாவில் முதலாவதாக மத்திய அரசின் சார்பில் மதுரை- திருமங்கலம் அருகேயுள்ள தோப்பூரில் அதிநவீன வசதிகள் கொண்ட பிரமாண்டமான எய்ம்ஸ் மருத்துவமனை ரூ.2,021கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.



இதனிடையே எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானபணிகள் எல்அன்டி நிறுவனத்தின் மூலம் 20 சதவீத பணிகள் நிறைவடைந்து இரண்டரை ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்பட உள்ளது. இதனிடையே கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு கப்பலூர் ரெயில் நிலையம் செயல்பட்டு வந்த இடத்திலிருந்து 4கி.மீ தொலைவிலுள்ள மத்திய அரசின் அதிநவீன எய்ம்ஸ் மருத்துவ மனையும்,2 கி.மீ தொலைவில் உள்ள உச்சப்பட்டி பகுதியில் 19,500 குடியிருப்புகள் கொண்ட துணைக் கோள் நகரம் அமைக்கப்பட்டு வருகிறது. அதே சமயம் தமிழகத்தின் 2-வது மிகப்பெரிய சிட்கோ தொழிற்பேட்டை கப்பலூரில் செயல்பட்டு வருகிறது. இதில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் நேரடியாக மற்றும் மறைமுகமாகவோ வேலை வாய்ப்பினை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வந்து செல்பவர்களின் வசதிக்காக, தற்போது 30 ஆண்டுகளுக்கு பின்னர் கப்பலூர் ரெயில் நிலையத்தை மீண்டும் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை தற்போது வலுப்பெற்று வருகிறது. மேலும் கப்பலூர்,கூத்தியார் குண்டு,கருவேலம்பட்டி, உச்சபட்டி,காந்திநகர்,தோப்பூர், ஆஸ்டின்பட்டி, சொக்கநாதன்பட்டி, இலங்கை தமிழர் அகதிகள் முகாம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பொது மக்கள் அனைவரும் இந்த புதிய ரெயில் நிலையத்தின் மூலம் பயன்பெற்றிட வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதே போல் மதுரை- தேனி மார்க்கத்தில் அகல ரெயில்பாதை அமைத்தலின் போது மூடப்பட்ட செக்கானூரணி ரெயில் நிலையமும் எய்ம்ஸ் மருத:துவமனைக்கு மிகவும் அருகாமையில் உள்ளது.

இதன் மூலமாக தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு எளிதாக வந்திட முடியும் எனவே ரெயில்வே நிர்வாகம் இந்த விஷயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு விருதுநகர் செங்கோட்டை மார்க்கத்தில் மூடப்பட்டிருந்த சங்கரலிங்கபுரம்,சோழபுரம், கரிவலம்வந்தநல்லூர் ஆகிய மூன்று ரெயில் நிலையங்களை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது போன்று மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வருபவர்களின் நலனை கருத்தில் கொண்டு அதன் கட்டுமான பணிகள் முடிவதற்கு முன்னதாக கப்பலூர், செக்கானூரணி ரெயில் நிலையங்களை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட வேண்டும் என தென் தமிழக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




**திருமங்கலம் நகரில் 36-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு நகர் போக்குவரத்து காவல்துறை சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை திருமங்கலம் உதவி காவல் கண்காணிப்பாளர் அன்சுல்நாகர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த பேரணியில் பி.கே.என். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயசாந்தினி, உதவி தலைமை ஆசிரியர் பாண்டி, போக்குவரத்து காவல் சார்பு ஆய்வாளர் பாரதி மற்றும் காவலர்கள், பி.கே.என். பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.**

## திருமங்கலம் அருகே
# கட்டுமான பணிகளின் போது சாய்ந்த நிலையில் காணப்படும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியால் பொதுமக்கள் அச்சம்



**திருமங்கலம், ஜன. 11-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கட்டுமான பணிகளின் போது சாய்ந்த நிலையில் காணப்படும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியால் அப்பகுதியில் வசித்திடும் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

திருமங்கலம் அருகேயுள்ள மேலக்கோட்டை வீட்டு வசதி வாரியம் பகுதியில் உள்ள பாரதி நகரில் சேடப்பட்டி - ஆண்டிபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி குடிநீர்வடிகால் வாரியத்தினால் கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளுக்கு குடிநீர் சப்ளை செய்யப்படவுள்ளது.

தற்போது இந்த பணிகளுக்காக தூண்கள் அமைக்கப்பட்டு வருகிறது. சுமார் 50 அடி உயரம் கட்டப்பட்டு வரும் இத்தூண்கள் தற்போது பைசா நகரத்துக்கு சாய்ந்த கோபுரம் போல் சாய்ந்து வருகிறது. இதன் மேல் தண்ணீர் தொட்டி கட்டினால் அது பாரம் தாங்காமல் கீழே சாய்ந்து விடும் அபாயம் இருப்பதாகவும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் அருகே புதிதாக அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு வருவதால் அப்பகுதியில் பெரும் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதாக மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் போல் சாய்ந்து காணப்படும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியை அகற்றி விட்டு அதே பகுதியின் வேறு இடத்தில் புதிதாக மற்றொன்றை கட்டிட வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மேலூரில் நெடுஞ்சாலை துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



**மேலூர், ஜன. 11-**

தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை துறை மதுரை நெடுஞ்சாலை துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் மேலூர் நெடுஞ்சாலை துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டம் சார்பில் மேலூர் போக்குவரத்து காவல்துறை சார்பிலும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை முன்னிட்டு மேலூர் அரசு இருபாலர் பள்ளியில் மாணவர்கள் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டனர். இந்தப் பேரணியை சாலை பாதுகாப்பு அழகு மதுரை கோட்டப்பொறியாளர் வரலட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சாலை பாதுகாப்பு குறித்து மாணவர்கள் கோஷங்கள் எழுப்பி பதாகைகள் ஏந்தி சென்றனர். பள்ளி வளாகத்தில் போக்குவரத்து விதிமுறைகள், விபத்து இல்லாமல் வாகனம் ஓட்டுவது, சாலை விதிமுறைகள் கடைபிடிப்பது குறித்து மாணவர்களுக்கு எல்.இ.டி திரையில் வீடியோ ஒளிபரப்பப்பட்டது. தேசிய நெடுஞ்சாலையில் இரு சக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கும், காரில் சீட் பெல்ட் அணிந்தவர்களுக்கும் ஸ்வீட் பாக்ஸ் மற்றும் கிப்ட் பாக்ஸ் நெடுஞ்சாலை துறையினர் வழங்கினர். மாணவர்கள் அனைவரும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். உடன் மேலூர் உதவி கோட்ட பொறியாளர்கள் பாலமுருகன், சாந்தினி, இளநிலை பொறியாளர் இந்திரா பிரியதர்ஷினி, உதவி பொறியாளர்கள் அ.ம. காவியா மீனா, ஐஸ்வர்யா, போக்குவரத்து காவல் ஆய்வாளர் சண்முகசுந்தரம், சாலை ஆய்வாளர் கார்த்திக், சாலை பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், மற்றும் போக்குவரத்து காவல்துறை, மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் நெகிழி பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி



**திண்டுக்கல், ஜன. 11-**

நெகிழி இல்லா பசுமை திண்டுக்கல் என்னும் நெகிழி பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் நெகிழி இல்லா பசுமை திண்டுக்கல் என்னும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் சிபின் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 28 வகையான நெகிழிப் பொருட்கள் பயன்படுத்தக் கூடாது என்பது குறித்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியில் துண்டு பிரசுரங்கள் மற்றும் மஞ்சப்பைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. பிளாஸ்டிக் பையை விடு மஞ்ச பையை எடு, நெகிழி வாங்காதே நம்ம பூமி தாங்காதே, வாழை இலை சாப்பாடு நீண்ட ஆயுள் நெகிழியிலே சாப்பாடு ஆயிசுக்கு கேடு உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி மாணவ- மாணவியர் பேரணியில் கலந்து கொண்டனர்.

அதேபோல் புகை நமக்கு பகை என்ற அடிப்படையில் போகி பண்டிகைக்கு பழைய டயர் சைக்கிள் டியூப் பிளாஸ்டிக் பொருட்களை எரிக்க கூடாது என்றும் விழிப்புணர்வை கோஷங்கள் எழுப்பப்பட்டன. இப்பேரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் தலைமையில் தபால் நிலையம் பேருந்து நிலையம் எம்.ஜி.ஆர். சிலை காமராஜர் சிலை, பெரியார் சிலை, மாநகராட்சி பெரிய கடை வீதி வழியாக குமரன் பூங்கா சென்றடைந்தது.

மாசு கட்டுப்பாட்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் டாக்டர் குணசேகரன் உதவி பொறியாளர்கள் உஷாராணி, அனிதா, தாரணி, மாசு கட்டுப்பாட்டு வாரிய பணியாளர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் 500க்கும் மேற்பட்டோர் பேரணியில் கலந்து கொண்டனர்.



● சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில், முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவின் மகள் தீபா தனது குடும்பத்தினருடன் சந்தித்து தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். அருகில் முதல்வரின் துணைவியார் துர்கா ஸ்டாலின் உள்ளார்.



● சென்னை எழிலகத்தில் தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட துறையில் பணிபுரிந்து பணியின்போது உயிரிழந்த நபர்களின் வாரிசுதாரர்கள் 24 பேருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிக்கான நியமன ஆணைகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச்செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய்த்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் பெ.அமுதா ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு உதவி வழக்கறிஞராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது மரணமடைந்த இரா.பெரியசாமியின் மனைவி பெ.பொற்செல்விக்கு கருணை அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்ட குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் பணிக்கான நியமன ஆணையினை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் இயக்குநர் ஜி.கிருஷ்ணராஜா, இணை இயக்குநர் மணிமேகலை உள்ளனர்.



● மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட கலெக்டர் மா.சௌ.சங்கீதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், கூடுதல் கலெக்டர் மோனிகா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் துறையின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், இயக்குநர் ஐ.எஸ்.மெர்சி ரம்யா மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, மகளிர் சுய உதவிக்குழுக்கள் நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை உள்ளிட்டவற்றில் சிறப்பாக செயல்படுவதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள "மின்மதி 2.0" கைபேசி செயலியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச்செயலாளர் ககன்தீப்சிங் பேடி, மேலாண்மை இயக்குநர்கள் திவ்யதர்ஷினி, ஸ்ரேயா சிங் உடனிருந்தனர்.



● சென்னையில் தி ரைஸ் அமைப்பின் சார்பில் நடைபெற்ற 14-வது உலக தமிழ் தொழிலதிபர்கள் மாநாட்டில் 20 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்க நிதியை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, தி ரைஸ் அமைப்பின் நிறுவனர் ஜெகத்கஸ்பர் ராஜா, டாக்டர் அன்சாரி ஆகியோர் உடனிருந்தனர்.

# பாலியல் வன்கொடுமை...(1-ம் பக்க தொடர்ச்சி)

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவோர் மீது தயவு தாட்சணியமின்றி நடவடிக்கை எடுத்து சட்டப்படி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய தண்டனைகளை வாங்கித் தருவதில் உறுதியோடு தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

### இரும்புக்கரம் கொண்டு

பெண்களுக்கு எதிரான குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கி, ஒடுக்கி வருகிறது இந்த அரசு. 86 விழுக்காட்டுக்கும் மேலான குற்றங்களில் 60 நாட்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து பெண்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் அரசாக தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் குற்றம் என்பது யாராலும் மன்னிக்கமுடியாத குற்றம். இத்தகைய கொடூர குற்றங்களில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்பது, இத்தகைய செயல்களில் ஈடுபடுவோருக்கான கடும் எச்சரிக்கையாக இருந்திட வேண்டும்.

### மாநில சட்டத்திருத்தம்

இந்த வகையில் பி.என்.எஸ். சட்டத்தின் கீழும், நமது மாநில அரசின் சட்டங்களின் கீழும், ஏற்கெனவே இத்தகைய குற்றங்களுக்கு தண்டனைகள் வரையறுக்கப்பட்டிருந்தாலும், இத் தண்டனைகளை மேலும் கடுமையாக்கிவிட வேண்டிய அவசியம் உள்ளதாகவே இந்த அரசு கருதுகிறது. இந்த அடிப்படையில், இத்தகைய குற்றங்களுக்கான தண்டனைகளை மேலும் கடுமையாக்குவதற்காக பி.என்.எஸ். மற்றும் பி.என்.எஸ்.எஸ். சட்டங்களின் மாநில சட்டத் திருத்தத்துக்கும், தமிழ்நாடு 1998-ம் ஆண்டு பெண்ணுக்கு துன்பம் விளைவித்தலை தடை செய்யும் சட்டத்திருத்தத்துக்கும், சட்ட முன்வடிவுகளை பேரவையின் ஒப்புதலுக்காக முன் வைக்கிறேன். அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும், என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

### ஆசிட் வீச்சு சம்பவம்...

தொடர்ந்து இந்த மசோதா தொடர்பாக பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:- பெண்களுக்கு எதிராக மின்னணு உள்ளிட்ட பல்வேறு வழிமுறை மூலம் பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவது அதிகரித்து வருகிறது. 12 வயதுக்கு உள்பட்ட சிறுமிகள் 18 வயதுக்கு உள்பட்ட இளம்பெண்கள் மற்றும் பெண்களை பாலியல் வன்புணர்ச்சி செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். 12 வயதுக்கு உள்பட்ட சிறுமிகளை வன்புணர்ச்சி செய்பவர்களுக்கு ஆயுள் காலத்திற்கும் கடுங்காவல் சிறை தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும். வன்புணர்ச்சி மற்றும் மரணத்தை விளைவிக்கும் அல்லது காயத்தை ஏற்படுத்தும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் ஆயுள் கால சிறை தண்டனை மற்றும் மரண தண்டனை கிடைக்கும்.

### ஆயுள்காலம் வரை...

பாலியல் வன்கொடுமை வழக்கில் அதிகபட்சமாக ஆயுள்காலம் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும். ஆசிட் வீச்சு சம்பவம் ஏற்பட்டால், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும். பெண்களை பின்தொடர்ந்தால் 5 ஆண்டுகள் வரை சிறை, பிணையில் விடுவிக்காதபடி சட்டதிருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. மீண்டும் மீண்டும் பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதானால், மரண தண்டனை விதிக்க சட்ட திருத்தம் வகை செய்யப்படும் என்று கூறினார். இந்த சட்ட திருத்தம் மீதான விவாதம் இன்று நடக்க உள்ளது.

## சட்டத்திருத்த மசோதாக்களின் முக்கிய அம்சங்கள்:

1) 2025-ம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் (தமிழ்நாடு திருத்த சட்டம்) என்று அழைக்கப்படும்.
2) 12 வயதுக்கு உள்பட்ட சிறுமிகள் 18 வயதுக்கு உள்பட்ட இளம்பெண்கள் மற்றும் பெண்களை பாலியல் வன்புணர்ச்சி செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.
3) 12 வயதுக்கு உள்பட்ட சிறுமிகளை வன்புணர்ச்சி செய்பவர்களுக்கு ஆயுள் காலத்திற்கும் கடுங்காவல் சிறை தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.
4) வன்புணர்ச்சி மற்றும் மரணத்தை விளைவிக்கும் அல்லது காயத்தை ஏற்படுத்தும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் ஆயுள் கால சிறை தண்டனை மற்றும் மரண தண்டனை கிடைக்கும்.
5) கூட்டு வன்புணர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் காலத்துக்கும் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
6) 18 வயதுக்கு உள்பட்ட பெண்களிடம் கூட்டு வன்புணர்ச்சியில் ஈடுபட்டால் ஆயுள் காலத்திற்கும் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்படும்.
7) மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள்கால சிறை தண்டனை விதிக்கப்படும்.
8) வன்புணர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு 14 ஆண்டுகளுக்கு குறையாத கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ஆயுள்கால சிறை ஆகியவையும் விதிக்கப்படும்.
10) குறிப்பிட்ட சில குற்றங்களில் பாதிக்கப்பட்ட நபரின் அடையாளத்தை வெளிப்படுத்தினால் 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை.
11) பெண்களின் கண்ணியத்தை அவமதிக்கும் வகையில் தாக்குதல் அல்லது பலத்தை பயன்படுத்தினாலும் 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்கும்.
12) பெண்களின் ஆடைகளை அகற்றி தாக்குதலில் ஈடுபடுபவர்கள், மறைந்திருந்து பார்த்து பாலியல் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்கள் ஆகியோருக்கும் 5 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை கிடைக்கும்.
13) பெண்களை பின் தொடர்ந்து சீண்டுபவர்களுக்கும் 5 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை வழங்கப்படும்.
14) ஆசிட் வீச்சு சம்பவங்களில் ஈடுபட்டு கொடுங்காயத்தை ஏற்படுத்துபவர்களுக்கு ஆயுள் தண்டனை, கடுங்காவல் சிறை தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.
15) ஆசிட்டை வீசுபவர்களுக்கும், வீச முயற்சிப்பவர்களுக்கும் 10 ஆண்டுகளுக்கும் குறையாத மற்றும் ஆயுள் காலம் வரை சிறை தண்டனை கிடைக்கும்.

# தமிழ்நாட்டில் பாம்பன் பாலம்...(1-ம் பக்க தொடர்ச்சி)

இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துவரும் நிலையில், தற்போது படுக்கை வசதி கொண்ட அம்ரித் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ரயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டு அனைத்து சோதனைகளும் நிறைவடைய குறைந்தபட்சம் மூன்று மாதங்களாவது ஆகும்.

அந்த வகையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 அம்ரித் ரயில்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். தமிழகத்தில் பாம்பன் பாலம் அமைக்கும் பணி முழுமையாக நிறைவு பெற்று சோதனை ஓட்டங்கள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த பாலமும் திறந்து வைக்கப்படும். அதே போன்று ஜம்மு காஷ்மீர் இடையே வந்தே பாரத் ரயில் பாதை அமைக்கும் பணியும் நிறைவு பெற்றுள்ளது. சோதனை ஓட்டங்கள் வெற்றிகரமாக நிறைவடைந்த பின்னர் அங்கு ரயில் இயக்கப்படும். கடந்த நிதியாண்டில் ரயில்வே மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இது வரை 76 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.